வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
பக்கங்கள் : 16
விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu

03.02.2021 புதன்கிழமை






05

தமிழரின் போராட்டத்தை கொச்சைப்படுத்தாதீர்



06

காணாமல் ஆக்கப்பட்டோர் போராட்டம்



07

கொரோனாவால் முதல் மருத்துவரை இழந்தது இலங்கை



11

கல்வித்துறைக்கு கொரோனா தடையாகாது

# தமிழின அழிப்புக்கு எதிராக ஐ.நாவிடம் நீதிகோரி சகல தமிழ்பேசும் உறவுகளும் ஓரணியில் திரள்க!

## கூட்டமைப்பின் தலைவர் பகிரங்க அழைப்பு



கொழும்பு, பெப். 03

“தமிழ்பேசும் மக்களை இலக்கு வைத்து இலங்கை அரசு மேற்கொண்டு வரும் அராஜகச் செயல்களைக் கண்டித்தும், வடக்கு, கிழக்கில் விஸ்வரூபம் எடுத்து வரும் தமிழின அழிப்புக்கு எதிராகவும், போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு ஐ.நாவிடம் நீதி கோரியும் சிவில் சமூக அமைப்புகளின் ஏற்பாட்டில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை இன்று முதல் எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ள கவனயீர்ப்புப் போராட்டத்தில் அனைத்துத் தமிழ்பேசும் உறவு

02

## முப்படையினர் வசம் உள்ள

# தனியார் காணிகளை ஒப்படைக்கவேண்டும்

## யாழ். ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 03

முப்படையினர் வசமுள்ள தனியார் காணிகள் ஒப்படைக் கப்படவேண்டும் என யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவின் கூட்டம் இணைத் தலைவர்களான வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான அங்கஜன் இராமநாதன்ஆகியோரின் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன்போதே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

02

## 65 ஆயிரத்தை தாண்டியது தொற்றாளர் எண்ணிக்கை

கொழும்பு,பெப்.03

நாட்டில் கொரோனா தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 65 ஆயிரத்து 344 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று மாலை மேலும் 361 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என சுகாதார அமைச்சின் தேசிய

02

## மன்னாரில் மீனவர்கள் மூவரை காணவில்லை

மன்னார், பெப். 03

மன்னார் - ஓலைத்தொடுவாய் கடற்பரப்பில் கடற்தொழிலுக்குச் சென்ற மூன்று மீனவர்கள் காணாமல்போயுள்ளதாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஓலைத்தொடுவாய் கடற்பரப்பில் இருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை மதியம்

02

## வவுனியாவில் துப்பாக்கிச் சூடு! இளைஞன் வைத்தியசாலையில்!!

வவுனியா, பெப்.03

வவுனியா - செட்டிக்குளம் முசல்குத்தி காட்டுப்பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த இளைஞன் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த இளைஞன் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் முசல்குத்தி காட்டுப்பகுதிக்குச்

02

## சம்பள உயர்வு குறித்த பேச்சு 8 ஆம் திகதிவரை ஒத்திவைப்பு

கொழும்பு, பெப். 03

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சம்பள விவகாரம் குறித்து கலந்துரையாடி தீர்மானமொன்றை எடுப்பதற்காக சம்பள நிர்ணய சபை பெப்ரவரி 6 ஆம் திகதி

02

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளது போராட்டத்துக்கு தடை

### வவுனியா நீதிமன்று விதித்தது

வவுனியா, பெப். 03

நாட்டின் சுதந்திரமான நாளை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் முன்னெடுக்கவிருந்த அடையாள உணவு தவிர்ப்பு போராட்டத்திற்கு வவுனியா நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்த சங்கத்தின் முக்கியஸ்தர்

02

## சர்வதேசத்திடம் நீதி கோருவதற்கு பல்லாயிரம் பேர் திரளவேண்டும்

### காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பகிரங்க அழைப்பு

கிளிநொச்சி,பெப்.03

சுதந்திர தினத்தைக் கரிநாளாகப் பிரகடனப்படுத்தி சர்வதேசத்திடம் நீதி கோருவதற்கு வடக்கு - கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

கிளிநொச்சியில் நேற்று இடம்

02

## ஜெனிவா கூட்டத்தை எதிர்கொள்ள இலங்கை அரசிடம் ஆற்றல் உண்டு!

### உரிய நேரத்தில் உரிய பதில் வழங்கப்படும் என்கிறார் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல

கொழும்பு, பெப். 03

மனித உரிமைகளை மீறியதாக இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை எதிர்கொள்வதற்கு ஆற்றல் இருப்பதாகவும் இது தொடர்பில் வழங்கப்படவேண்டிய பதில் உரிய நேரத்தில் வழங்கப்படும் என்றும் அமைச்சரவை பேச்சாளரும்,

02

## தமிழின...

களும் ஓரணியில் திரண்டு ஆதரவு வழங்க வேண்டும்."

- இவ்வாறு அறைகூவல் விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன்.

ஊடகங்களுக்கு அவர் விடுத்துள்ள விசேட அறிவிப்பிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: -

"வடக்கு, கிழக்கு தமிழ்பேசும் மக்களின் பூர்வீக தாயகம். இது இலங்கை அரசாலும், அதன் படைகளாலும் ஆக்கிரமிக்கப்பட்டு வருவதாலேயே அதைத் தடுக்கும் வகையிலும், எமது பூர்வீக தாயகத்தை நாமே ஆளும் வகையிலும் சுயநிர்ணய உரிமை கேட்டுப் போராடி வருகின்றோம். ஆரம்பத்தில் அறவழியிலும், அதன்பின்னர் ஆயுத வழியிலும், மீண் டும் ஜனநாயக வழியிலும் நாம் போராடி வருகின்றோம்.

ஆனால், தமிழர்களின் உரிமைப் போராட்டங்களை மதிக்காத இலங்கை அரசு, தமிழர்கள் மீதான அடக்குமுறைகளையும், இன அழிப்பு நடவடிக்கைகளையும் பகிரங்கமாக மேற்கொண்டு வருகின்றது.

தற்போதைய அரசின் நடவடிக்கைகள் மிகவும் மோசமானவையாக உள்ளன. விசேடமாக அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்தை வலுக்கட்டாயமாக நிறைவேற்றிய அரசு, வடக்கு, கிழக்கை இராணுவ மயமாக்கி வருகின்றது. பாரிய குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளான இராணுவ அதிகாரிகளுக்கும், ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளுக்கும் பதவி உயர்வுகளை வழங்கும் அரசு, அவர்களை முக்கிய பொறுப்புக்களில் நியமித்தும் வருகின்றது. சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் இராணுவத்தின் கையே தற்போது ஓங்கி வருகின்றது.

பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து - சிறுபிள்ளைத்தனமான காரணங்களைக் கூறி வழக்குகளைத் தொடுத்து நீதிமன்றங்களைத் தவறாகப் பயன்படுத்தும் இந்த அரசு, நீதியான வகையில் நீதிமன்றங்கள் செயற்படுவதற்கு முட்டுக்கட்டையாகவும் இருந்து வருகின்றது.

தமிழ் மக்களின் கலாசாரப் பண்பாட்டு அடையாளங்களை இந்த அரசு திட்டமிட்டு அழித்து வருகின்றது.

தமது கட்டுப்பாட்டில் இருக்கும் திணைக்களங்கள் ஊடாக வடக்கு, கிழக்கில் பௌத்த மயமாக்கல் திட்டங்களை இந்த அரசு மேற்கொண்டு வருகின்றது.

வடக்கு, கிழக்கில் பல இந்து ஆலயங்களைத் தொல்லியல் அகழ்வாராய்ச்சி என்ற பெயரில் ஆக்கிரமிக்கும் அரசு, அங்கு பௌத்த விகாரைகளை நிறுவுவதற்கும் முயற்சித்து வருகின்றது.

அதேவேளை, வடக்கு, கிழக்கில் காணிகளை அபகரிக்கும் அரசு, சட்டவிரோத சிங்களக் குடியேற்றங்களையும் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது.

முஸ்லிம் மக்களின் மத உரிமையில் கைவைத்துள்ள இந்த அரசு, கொரோனாவால் உயிரிழப்போரின் ஜனாஸாக்களை அம்மக்களின் விருப்பத்துக்கு மாறாக எரியூட்டி வருகின்றது. மத உரிமைக்காகப் போராடும் முஸ்லிம் சமூகத்தைப் பழிவாங்கும் அரசு, அவர்களை அடக்கி ஆள முனைகின்றது.

பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் பலரைக் கைதுசெய்த அரசு, அவர்களைத் தடுத்துவைத்துள்ளது.

பல வருடங்களாக சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஆக்கபூர்வமான எந்தவித நடவடிக்கைகளையும் அரசு எடுக்க வில்லை.

தமக்கு விசுவாசமான குற்றவாளிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கியுள்ள அரசு, தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய மறுப்புத் தெரிவித்து வருகின்றது.

வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நீதி கேட்டு பல வருடங்களாகப் போராடி வருகின்றனர். ஆனால், அவர்களுக்கான நீதியை வழங்காது அரசு ஏமாற்றி வருகின்றது.

ஆயிரம் ரூபா நாள் சம்பள உயர்வு கேட்டுப் போராடி வரும் மலையகத் தமிழர்களின் கோரிக்கையை நிறைவேற்றாது அரசு இழுத்தடிப்புச் செய்து வருகின்றது. அரசின் இவ்விதமான நடவடிக்கை கள் நாட்டின் ஜனநாயகத்துக்கு உகந்த வையல்ல.

அரசின் கொடூரங்களால் பாதிக்கப்பட்ட தமிழ்பேசும் மக்களுக்கு ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச சமூகம் நீதியைப் பெற்றுத் தரவேண்டும் என்று கோரி முன்னெடுக்கப்படவுள்ள இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் தமிழ்பேசும் உறவுகள் அனைவரும் பங்கேற்க வேண்டும். - என்றுள்ளது. (அ)

## சம்பள உயர்வு...

கூடும் என முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், சில ஆவணங்களை தயாரிப்பதற்கு பெருந்தோட்டக் கம்பனிகள் அவகாசம் கோரியுள்ளதாலேயே, கலந்துரையாடல் 8 ஆம் திகதிவரை பிற்போடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தொழில் அமைச்சர் நிமல்சிறிபாலடி சில்வா, தமக்கு தெரியப்படுத்தினார் என்று இ.தொ.காவின் உபதலைவரும், பிரதமரின் பெருந்தோட்ட இணைப்பாளருமான செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

## சர்வதேசத்திடம்...

பெற்ற ஊடகச் சந்திப்பின்போது இந்த அமைப்பின் பணிப்பாளர் பத்மநாதன் கருணாவதி இவ்வாறு அழைப்பை விடுத்துள்ளார்.

வரும் 4ஆம் திகதி வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி காக்காகடைச் சந்தியில் இருந்து காலை 8.30 மணிக்கு பேரணி ஆரம்பமாகி பழைய பஸ் தரிப்பிடத்தைச் சென்றடை யும். கிழக்கு மாகாணத்தில் சம நேரத்தில் மட்டக்களப்பு கல்லடி பாலத்தில் ஆரம்பமாகி காந்தி பூங்காவைச் சென்றடையும்.

எனவே இப்பேரணிக்கு மத குருக்கள், பொது அமைப்புக்கள், சிவில் சமூகங்கள், வர்த்தக சங்கங்கள் தமிழ் தேசியக் கட்சிகள், பல்கலைக்கழக மாணவ சமூகங்கள் ஒன்றுணைந்து பூரண ஆதரவு வழங்கி வடக்கு, கிழக்கு தழுவிய அறவழிப் போராட்டத்துக்கு அணிதிரளுமாறு வேண்டி நிற்கின்றோம்- என்றார். (அ-எ)

## காணாமல்...

களிடம் இந்தத் தடை உத்தரவு குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பொலிஸாரே நீதிமன்றத்தை நாடி இந்தத் தடை உத்தரவை பெற்றுள்ளனர். இதன்படி அந்தத் தடை உத்தரவில்,

தடை செய்யப்பட்ட இயக்கமான விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் பிரச்னை, அரசியல் கைதிகளை விடுவிக்காமை தொடர்பான கருத்துக்களை பிரதானமாக முன்வைத்து சுதந்திர தின நாளில் எதிர்ப்பு நடவடிக்கை செய்யவோ அல்லது ஆர்ப்பாட்டமோ, நடை யாத்திரை போன்றவற்றை செய்யவோ தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதன்படி, இன்று புதன்கிழமை தொடக்கம் ஆறாம் திகதி வரை வவுனியா ஏ-9 வீதியில் அல்லது தபால் நிலையம் முன்பாகவோ, பழைய பஸ் நிலையம் முன்பாகவோ போராட்டங்களை நடத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

73ஆவது தேசிய சுதந்திர தினத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 46ஆவது அமர்வை இலக்காகக் கொண்டும் இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்தக் குற்றங்களை செய்யக்கூடாதென சண்முகராஜ் சறோஜாதேவி, சிவநாதன் ஜெனிற்றா, காசிப்பிள்ளை ஜெயவனிதா, கிறிஸ்தோப்பு கிருஸ்ணன் டயஸ் இராசமடு ஆகியோருக்கு இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தவிர, இது தொடர்பான கருத்தைக் கூற எதிர்வரும் 15ஆம் திகதி 9 மணிக்கு நீதிமன்றுக்கு சமுகமளிக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (ஐ)

## ரணிலின்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை எடுத்தே தீரும் என் பதற்கு மனித உரிமைகள் காப்பகம் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை ஆணையாளர் மிச்சேல் பச்லெட் ஆகியோர் வெளியிட்ட கருத்துக்கள், அறிக்கைகள் நல்ல ஆதாரங்களாக இருக்கின்றன.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கரமசிங்க மேலும் கருத்து வெளியிடுகையில், ஜெனிவா உரிமைகள் கூட்டத்தொடர் நடவடிக்கையை அரசியல் கண்ணோட்டத்தோடு பார்க்கக்கூடாதென்றும், நாட்டு நலனை முன்னிறுத்தியே ஜெனிவா கூட்டத்தொடரை பார்க்கவேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார். ரணில் விக்கிரமசிங்கவின் இக்கருத்தை பார்க்கும்போது, 2015முதல் 2020வரை ஆட்சியிலிருந்த நல்லாட்சி அரசாங்கம் ஜெனிவா பிரேரணை குறித்து தனது அனுசரணையை சர்வதேச சமூகத்திற்கு வழங்கியதோடு, அதனை நிறைவேற்றும் அரசியல் செல்வாக்கை உள்நாட்டில் கொண்டிருந்த போதிலும் எதனையும் செய்துவிடாது, தற்போது இன்றைய ஆட்சியாளர்களை எச்சரிப்பது அவரது வெகுளித்தனமான, அதேசமயம் கபடத்தனமான கருத்து, கண்ணோட்டங்களையே வெளிப்படுத்துவதாக இருக்கின்றது.

## வவுனியாவில்...

சென்றிருந்த நிலையில் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனால் படுகாயமடைந்த அவர் மீட்கப்பட்டு செட்டிக்குளம் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் முதலியார்குளம் பகுதியைச் சேர்ந்த அன்ரனி ஜெறின் (வயது- 36) என்ற நபரே படுகாயமடைந்துள்ளார்.

துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டவர்கள் தொடர்பான தகவல்கள் வெளிவரவில்லை. இதுதொடர்பான விசாரணைகளை செட்டிக்குளம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-எ)

## தனியார்...

குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் முப்படையினர், பொலிஸார் வசமுள்ள காணிகள் தனியாருடையவை. அவற்றுக்கு சொந்தமான மக்கள் வேறு இடங்களில் வாடகைகளில் குடியமர்ந்துள்ளார்கள். இராணுவத்தின் வசமுள்ள மக்கள் பயன்படுத்தாத காணிகளை இராணுவத்தினர் தோட்டச் செய்கைக்கும் வேறு தேவைகளுக்குமாக பயன்படுத்துகின்றனர். மக்களின் காணிகள் மக்களுக்கே வழங்கப்படவேண்டும். அவற்றை வழங்குவதன் மூலம் தான் மக்கள் அதிலிருந்து பயன்பெற்று முன்னேறுவார்கள்.எனவே இந்தக் காணிகளை மக்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும் என கூட்டத்தில் பங்கேற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் தெளிவுபடுத்தினர்.

குறிப்பாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம், யுத்தம் முடிவடைந்து 12 வருடங்கள் ஆகியுள்ள நிலையில் இராணுவத்தினர் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்படாதுள்ளன. எனவே இந்தக் காணிகள் விடுவிக்கப்படவேண்டும் எனத் தெரிவித்தார்.

அங்கஜன் இராமநாதன் கருத்துத் தெரிவிக்கையில்-

மக்களின் காணிகள் மக்களுக்கு வழங்கப்படவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் தீர்மானத்தை அனுப்புகின்றபோது முழுமையான விவரங்களுடன் சேர்த்து அனுப்புவதன்மூலம் அந்தக் காணிகளை விடுவிப்பது இலகுவாக இருக்கும்-என்றார்.

பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கருத்து தெரிவிக்கையில்-

காணிகள் விடுவிடுவிக்கப்படவேண்டும் என்பது அனைவரின் கோரிக்கையாக இருக்கின்றது. அவ்வாறான நிலையில் இராணுவத்தினரின் தேவைக்காக காணிகள் அளவீடு செய்யப்பட்ட நிலைமையும் உள்ளது. அதேபோல வேறு பல காணிகள் அளவீட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது எதிர்ப்புக்களினால் கைவிடப்பட்ட நிலையும் காணப்படுகின்றது. ஆகவே அவற்றையும் உள் இணைத்ததாக தீர்மானத்தை அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும்-என்றார்.

இதனையடுத்து குறித்த விவரங்களுடன் தீர்மானம் அனுப்புவதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் இந்த வருடத்துக்கான முதலாவது ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதில் துறைசார்ந்த விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

## 65 ஆயிரத்தை...

தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. இதுதொடர்பான அறிக்கையை சுகாதார மேம்பாட்டுப் பணியகம் நேற்று இரவு 7 மணிக்குப் பின்னர் வெளியிட்டுள்ளது.

இதனடிப்படையில்968 பேர்கொரோனா தொற்றிலிருந்து குண மடைந்து நேற்று வீடு திரும்பியுள்ள நிலையில் 59 ஆயிரத்து 43 பேர் இது வரை தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர்.

இதனால் குணமடைந்தவர்களைத் தவிர்த்து 5 ஆயிரத்து 978 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இருப்பினும் கொரோனா தொற்றுக் காரணமாக இதுவரை 323 பேர் உயிரிழந்தனர்.

இதேவேளை கொரோனா தொற்றுக்கு இலக்காகிய கம்பஹா - ராகமை வைத்திய சாலையைச் சேர்ந்த 31 வயது இளம் மருத்துவர் இன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (அ-எ)

## ஜெனிவா...

வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2010 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் இராணுவம் தொடர்பில் அரசாங்கத்தின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு அப்போது இருந்த எமது அரசாங்கத்தின் நிலைப்பாடு மிகவும் தெளிவாக முன்வைக்கப்பட்டது.

எமக்கிடையே பல உடன்பாடுகள் ஏற்பட்டன. இறுதியாக 2015 ஆம் ஆண்டு அரசாங்கம் மாற்றமடைந்தது அப்பொழுது இருந்த வெளிநாட்டு அமைச்சரினால் 30/1 என்ற ஆலோசனைக்கு அமைய இணைய அனுசரணையுடன் நாம் தவறு செய்ததாக பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. அதன் பெறுபேற்றையே நாம் அனுபவிக்கின்றோம்.

இதில் இருந்து விலகுவது சரியானது என்பதை விரிவாக தெரிவிக்க எதிர்பார்க்கிறோம். இது தொடர்பில் விரிவான வகையில் விடயங்களை சமர்ப்பிக்க முடியும்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு எதிரான யோசனையை அரசாங்கம் முற்றாக நிராகரித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அடிப்படை அற்றவை. ஒன்றுக்கொன்று முரணானவை. -என்றார்.

## மன்னாரில்...

அந்த மூவரும் கடற்றொழிலுக்குச் சென்றதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மீனவர்களின் உறவினர்களால், மன்னார் பொலிஸ், மாவட்ட அரசாங்க அதிபர், கடற்தொழில் திணைக்களம் மற்றும் கடற்படை ஆகியோரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர்கள், தூண்டில் மூலம் மீன் பிடிக்கப் படகு ஒன்றில் தொழிலுக்குச் சென்ற நிலையிலேயே காணாமல்போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் கொண்ணையன் குடியிருப்பு கிராமத்தைச் சேர்ந்த எஸ். கொட்வின் (வயது-38), யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆர்.கண்ணன் (வயது-55) மற்றும் எஸ்.பாண்டியன் (வயது-23) ஆகிய மூன்று மீனவர்களே இவ்வாறு காணமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கடற்படையினர் கடலில் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஈழநாடு
Eelanadu
03.02.2021 புதன்கிழமை
சார்வரி, தை 21

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# புறம்தள்ளப்படும் இந்தியா

கிழக்கு கொள்கலன் முனைய விவகாரம், மீண்டும் நெருக்கடிகளை தோற்றுவித்திருக்கின்றது. அதேவேளை, இலங்கையில் இந்தியாவின் இடம் என்ன - என்னும் கேள்வியையும் எழுப்பியிருக்கின்றது. துறைமுக அதிகார சபை தொழிற்சங்களின் தொடர்ச்சியான எதிர்ப்பை தொடர்ந்து கிழக்கு கொள்கலன் முனையத்தை எவருக்கும் வழங்கப் போவதில்லையென்று, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருக்கின்றார். இதனைத் தொடர்ந்து, கொள்கலன் முனையத்தை தொடர்ந்தும் துறைமுக அதிகார சபையின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதெனவும், அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. இதனைத் தொடர்ந்து, இலங்கைக்கான இந்திய தூதரகத்தின் பேச்சாளர், ஏற்கனவே கையெழுத்திட்ட ஒப்பந்தத்திற்கு அமைவாக விடயங்களை விரைவாக அமுல்படுத்தவேண்டுமென்றே இந்தியா எதிர்பார்ப்பதாக தெரிவித்திருக்கின்றார். இந்திய தூதரகம் மிகவும் அரிதாகவே இவ்வாறான அபிப்பிராயங்களை தெரிவிப்பதுண்டு. தூதரகம் அபிப்பிராயம் கூறுமளவிற்கு நிலைமைகள் சிக்கலடைந்திருக்கின்றன.

ரணில்-மைத்திரி அரசாங்கத்தில், மேற்படி கிழக்கு கொள்கலன் முனையத்தை இந்தியா, ஜப்பான், இலங்கை ஆகிய நாடுகள் இணைந்து அபிவிருத்தி செய்வதற்கான முத்தரப்பு ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டது. 2019இல் மேற்கொள்ளப்பட்ட மேற்படி ஒப்பந்தத்திற்கு அமைவாக, தனியாரின் முதலீட்டுடன் 35 வருடங்களுக்கு இந்திய அரசாங்கம் மற்றும் ஜப்பானால் பரிந்துரைக்கப்படும் நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து, குறித்த கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது.

மேற்படி முத்தரப்பு ஒப்பந்தத்திற்கு அமைவாக, 2020 ஒக்ரோபரில் இந்திய முதலீட்டாளர்கள் தங்களின் விண்ணப்பங்களை சமர்ப்பித்திருந்தனர். மேற்படி ஒப்பந்தம் அமுல்படுத்தப்பட வேண்டுமென்றே, தற்போது இந்தியா வலியுறுத்துகின்றது. கடந்த வாரம் நிகழ்வொன்றில் பேசிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைவாக விடயங்களை மேற்கொள்ளவேண்டியது அரசாங்கத்தின் கடமையென்றும், அவ்வாறு செய்யாவிட்டால், நாங்கள் சீனாவிற்கு ஆதரவாக செயற்படுவதாக நோக்கப்படலாம் என்றும் தெரிவித்திருந்தார். ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்திருந்தபோதிலும்கூட, கொள்கலன் முனையத்தை எவருக்கும் வழங்குவதில்லையென்னும் முடிவை, மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சரவை எடுத்திருக்கின்றது.

அரசாங்கத்தின் நடவடிக்கைகள் சீனாவிற்கு சார்பாக இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சாட்டியிருக்கின்றது. இந்த விடயத்தில் சீனாவின் தலையீடு இருப்பதற்கான வாய்புக்கள் இருப்பதாகவும் சில இந்திய ஊடகங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தியிருக்கின்றன. நாட்டின் வளங்களை வெளியாருக்கு விற்பதையே தாம் எதிர்ப்பதாக துறைமுக அதிகார சபை, தொழிற்சங்கங்கள் கூறுகின்றன. ஆனால், ஏற்கனவே சீனாவுடன் மேற்கொள்ளப்பட்டிருக்கும் ஒப்பந்தங்கள் தொடர்பில் இவர்கள் எதிர்ப்பை வெளியிடவில்லை. இந்த அடிப்படையிலேயே சில சந்தேகங்கள் முன்வைக்கப்படுகின்றன.

அரசாங்கங்கள் மாறினாலும்கூட, நாடுகளுடன் செய்யப்படும் ஒப்பந்தங்களை மதித்து நடக்கவேண்டியது, ஓர் இராஜதந்திர நடைமுறையாகும். அதனை மீறும்போது, குறித்த நாடுகளுக்கிடையிலான இராஜதந்திர உறவுகள் பாதிக்கப்பட வாய்ப்புண்டு. அதிலும், இலங்கையின் உடனடி அயல்நாடான இந்தியாவுடன் மேற்கொண்ட ஒப்பந்தமொன்றை, பொதுஜன பெரமுன அரசாங்கம் சாதாரணமாக புறத்தள்ளிச் செயற்பட முற்படுவதை எவ்வாறு விளங்கிக்கொள்வது? இந்தியா தொடர்ந்தும் இலங்கையை ஒரு நட்பு நாடாகவே கூறிவருகின்றது. அயல்நாடுகளுக்கு முன்னுரிமையளிக்கும் மோடியின் சாகர் கோட்பாட்டின் அடிப்படையிலும் இலங்கைக்கு முன்னுரிமையளிக்கப்படுகின்றது. ஒரு நட்பு நாடு, பிறிதொரு நட்புநாட்டுடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏன் இந்தளவு இழுபறி? அவ்வாறாயின், நட்புநாடு என்னும் வகைப்படுத்திலில் ஏதும் பிரச்னைகள் இருக்கின்றனவா?

# ரணிலின் ‘ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுத கதை’



- அலசுவது இராஜதந்திரி -

இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மியன்மாரில் தற்போது இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியதை முன்னுதாரணமாகக் குறிப்பிட்டு, இலங்கையும் முழுமையான இராணுவ ஆட்சியொன்றை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாக எச்சரித்துள்ளார். மங்கள சமரவீரவின் எச்சரிக்கை காலமறிந்த தொன்றாக இருக்கின்ற போதிலும், இலங்கையில் ஏற்கனவே ஏறத்தாழ இராணுவ ஆட்சிக்கு சமாந்தரமான வகையில் நிர்வாக நடவடிக்கைகள் முன்னாள் இராணுவ அதிகாரிகளினால் பெரிதும் மேற்கொள்ளப்படுவதையே அவதானிக்க முடிகின்றது.

மியன்மாரில் ஆட்சிக் கவிழ்ப்பு , மற்றும் சீனாவின் ஆதிக்க விஸ்தரிப்பு என்பவற்றோடு இலங்கையில் எதேச்சையான அரசியல் போக்கு படிப்படியாக அதிகரித்துவரும் சூழலிலும், ஏற்கனவே கொண்டுவரப்பட்ட ஜெனிவா பிரேரணைகளில் காணப்படுகின்ற அம்சங்கள் புறக்கணிக்கப்பட்ட நிலையிலும் மனித உரிமைகள் காப்பகம் தனது இலங்கை குறித்த அறிக்கையை காரசாரமான முறையிலேயே எச்சரிகையோடு வெளியிட்டுள்ளது. மனித உரிமைகள் கண்காணிப்பகம் விடுத்துள்ள அறிக்கையில் இலங்கை இத்தடவை தனது தவறுகளை ஏற்றுக்கொண்டு திருந்தவேண்டும். இல்லையேல், சர்வதேச சமூகத்தினால் வைக்கப்படவேண்டிய இடத்தில் இலங்கை வைக்கப்படும் என்பதையே இது சுட்டிக் காட்டுவதாக இருக்கின்றது.

**93 பக்க கண்டன அறிக்கை**

அதேசமயம், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் இலங்கையில் இறுதிக்கட்ட யுத்ததின்போது அப்பாவி மக்களை காப்பாற்றத் தவறியதையும் மனித உரிமைகள் காப்பகம் தனது 93 பக்கங்களைக்கொண்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் ஸ்தாபன மனித உரிமைகள் பேரவை இலங்கை தொடர்பாக இத்தடவை கொண்டவரப்படும் தீர்மானங்களில் எத்தகைய குறைபாடுகளும் இருக்கலாகாது எனவும் தெரிவித்துள்ளது.

இதன்மூலம், மனித உரிமைகள் காப்பகம் இலங்கை குறித்த ஜெனிவா நடவடிக்கைகளில் எதுவும் இசகுபிசகாக இருந்து விடலாகாது என்பதிலும், பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்து நீதி நியாயங்களுக்காக ஏங்கிக் கொண்டிருக்கலாகாது எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை முன்னாள் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க, ஜெனிவா விடயத்தை பொறுப்பாக கையாளுமாறு இன்றைய ஆட்சியாளர்களை கோரியுள்ளதுடன், சர்வதேச சமூகத்தின் கண்டனங்களுக்குள்ளாக வேண்டாமெனவும் கேட்டுக்கொண்டுள்ளார். முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இக் கருத்தை அவதானிக்கும்போது, ‘ஆடு நனைகின்றதே என ஓநாய் அழுத’ கதையாகவே இருக்கின்றது.

வடக்கு-கிழக்கு மக்களின் நல்லாட்சி என்று கூறப்பட்ட, முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கரமசிங்க தலைமையிலான ஆட்சியை தோற்றுவிப்பதில் வடக்கு-கிழக்கு மக்களே பெரும் பங்காற்றியிருந்தனர். அவர்களது நோக்கமெல்லாம் யுத்தத்திற்கு பின்னரான அமைதியான சூழலில் தமக்கு யுத்தம் ஏற்படுத்திய பாதிப்புகளுக்கு நீதிகிடைப்பதோடு, இனநல்லுறவை பேணும் விதத்தில் தமது அரசியல் அபிலாஷைகளும் நிறைவேற்றப்படவேண்டும் என்ற எதிர்பார்ப்பாகவே இருந்தது. இதன் காரணமாகவே நல்லாட்சி அரசாங்கத்தின் அனுசரணையோடு ஜெனிவா பிரேரணையும் பல முன்னேற்றகரமான அம்சங்களோடு அமெரிக்கா தலைமையில் சர்வதேச சமூகத்தினால் கொண்டுவரப்பட்டிருந்தது.


ஆனால், அன்றைய பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவும் அவரது வெளிநாட்டமைச்சர் மங்கள சமரவீரவும் அன்று மிக தந்திரமான முறையில் தமிழ் தேசிய கூட்டமைப்பையும் தமது பிடியில் வைத்து, ஜெனிவா பிரேரணை நிறைவேறாதுபோவதை காலதாமதங்களோடு உறுதி செய்தனர்.

**‘சாத்தான் வேதம் ஓதும் நிலை’**

ஆனால், ஜெனிவா மனித உரிமைப்பேரவையின் 46ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாவதற்கு இன்னும் ஒருசில வாரங்களே இருக்கும் தறுவாயில், ‘சாத்தான் வேதம் ஓதுவது போல’ ரணில் விக்கரமசிங்க தற்போது ஜெனிவா மனித உரிமைப்பேரவை கூட்டத்தொடர் குறித்து தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

யார் எதைக் கூறினாலும், சர்வதேச சமூகம் ஜெனிவாவில் இலங்கை குறித்து எடுக்கவேண்டிய நடவடிக்கை (02ஆம் பக்கத் தொடர்ச்சி)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# மியன்மரில் ஜனநாயக விரோதமான அதிகார மாற்றத்தை புறக்கணிப்போம்

## ஐக்கிய மக்கள் சக்தி திட்டவட்டம்



கொழும்பு,பெப்.03

**மியன்மரில் இடம்பெற்ற சூழ்ச்சி மிக்க அதிகார மாற்றத்தை, ஜனநாயகத்தை மதிக்கும் ஜனநாயகக் கோட்பாடுகளின் மீது நம்பிக்கை கொண்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தி முற்றாக நிராகரிப்பதோடு, சூழ்ச்சி மிக்க இந்நிகழ்வை மானுட வாழ் உலகத்தவர்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்பதும் எமது நிச்சயமாகும் என ஐக்கிய மக்கள் சக்தி பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற மியன்மார் தேர்தலில் ஆங் சான் சூகி தலைமையிலான கட்சி 80 வீத வெற்றியை பெற்றுக்கொண்டது. இதன் பிரகாரம் இராணுவ ஆட்சி முடிவுற்றதும் ஏற்பட்ட மக்கள் ஆணைக்கு மதிப்பளிப்பது ஜனநாயகத்தை விரும்பும் சகல தரப்பினரின் பொறுப்பாகும்.

ஆட்சியை ஏற்படுத்துவதற்கும் இல்லாமலாக்குவதற்கும் ஜனநாயகத்தை மதிக்கும் உலகில் அதனை ஒன்றித்த ஏற்பாடுகள் இருக்கும் நிலையில், அந்த சகல ஏற்பாடுகளும் மக்கள் ஆணையால் கற்பிக்கப்படுகிறது என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

மியன்மாரில் ஜனநாயகத்தை ஸ்தாபிப்பதும், அரசமைப்பு சார் பாராளுமன்ற முறைமைகளுக்கு சவால் விடுக்காமல் இருப்பதற்கும், வரையறையின்றி மேற்கொள்ளப்படும் அரசியல் பழிவாங்கல்களை உடனே நிறுத்துவதற்கும் முன்னேற்பாடுகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்- என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

# துறைமுக கிழக்கு முனையம் முழுமையாக இலங்கைக்கே

## ரோஹித கூறுகிறார்



கொழும்பு,பெப்.03

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் நடவடிக்கையை 100 வீதம் இலங்கை துறைமுக அதிகார சபையின் கீழ் கொண்டுவரும் அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என துறை முக அமைச்சர் ரோஹித அபே குணவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பு துறைமுக கிழக்கு முனையம் தொடர்பில் கடந்த 2019 ஆம் ஆண்டு மே மாதம் இந்தியா, இலங்கை மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு இடையில் முத்தரப்பு புரிந்து ணர்வு உடன்படிக்கை கைச்சாத் திடப்பட்டிருந் தது என்றும் அவர் சுட்டிக் காட்டினார். கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

**03-பெப்-2021 புதன்கிழமை சார்வரி வருடம் - தை - 21**
**சுபமுகூர்த்த நாள் (காலை 9.00 - 10.30)**

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 9.00 - 10.30 |
| எமகண்டம் | : | 7.30 - 9.00 |
| திதி | : | சஷ்டி |




**மேடம்**
நட்பால் நல்ல காரியம் நடைபெறும் நாள். எந்தக் காரியமும் செய்து முடிப்பீர்கள். குடும்பத்தினர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். வரவு திருப்தி தரும்.

**இடபம்**
மக்கள் செல்வங்களால் மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள். மங்கல நிகழ்ச்சி மனையில் நடைபெறவில்லையே என்று கவலைப்படுவீர்கள். விரும்பியதை செய்து முடிப்பீர்கள்.

**மிதுனம்**
வருமானம் தரக்கூடியதாக அமையும் நாள். வீட்டை அழகுபடுத்தும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். உத்தியோக மாற்றச் சிந்தனை மேலலோங்கும்.

**கடகம்**
நம்பிக்கைகள் நடைபெறும் நாள். உத்தியோக முன்னேற்ற முயற்சிகளில் அனுகூலம் உண்டு. வருமானம் திருப்தி. மாற்றுக் கருத்துடையயோர் மனம் மாறுவர்.

**சிம்மம்**
நிதி நிலை உயரும். நீண்ட நாளைய எண்ணம் நிறை வேறும். சுபகாரியங்கள் நடை பெறுவதற்கான அறிகுறி. ஒவ்வாத உணவுகளைத் தவிர்ப்பது நல்லது.

**கன்னி**
நன்மை கிடைக்கும். வீட்டுக்குத் தேவையானவற்றை வாங்கி மகிழும் வாய்ப்பு உண்டு. கை மாற்றாகக் கொடுத்த தொகை வந்து சேரும்.

**துலாம்**
விழிப்புணர்ச்சி தேவைப்படும் நாள். குடும்பத்திற்குத் ஆடரம்பர பொருட்களை வாங்கும் வாய்ப்பு. தொழில் ரீதியாக எடுத்த முயற்சியில் தாமதம் ஏற்படலாம்.

**விருட்சிகம்**
வருமானம் திருப்தி தரும் நாள். பிரபலமானவர்களின் சந்திப்பு கிட்டும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். தொழில் வளர்ச்சி உறுதுணையாக இருக்கும்.

**தனுசு**
நினைத்தது நிறைவேறும் நாள். புதிய வேலை வாய்ப்பு வருவதற்கான அறிகுறிகள் தென்படும். தொழில் போட்டிகள் அதிகரிக்கும். வரவு திருப்தி தரும்.

**மகரம்**
எண்ணங்கள் எளிதில் நிறை வேறும் நாள். தர்ம காரியங்களுக்கும் செலவிட்டு மகிழ்வீர்கள். சொத்துக்கள் சம்பந்தமாக எடுத்த முயற்சி வெற்றி பெறும்.

**கும்பம்**
நட்பு பகையாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய நாள். நம்பிக்கைகள் நடைபெறாமல் போகலாம். வீண்பழிக்கு ஆளாக நேரிடும். தேவைகளில் தாமதம் ஏற்படும்.

**மீனம்**
மனக்குழப்பம் அகலும். மனம் கோணாமால் நடந்து கொள்வது நல்லது. உங்கள் செயற்பாடு மற்றவர்களின் விமர்சனத்திற்கு உட்பட நேரிடும்.

# தொற்றாளர்களை வீடுகளில் தனிமைப்படுத்தவே முடியாது

கொழும்பு, பெப். 03

நோய் அறிகுறிகளை வெளிப்படுத்தாதவர்கள்உட்பட கொவிட்-19 நோயாளிகள் அனைவரையும் கட்டாயமாக மருத்துவமனைகளில் அனுமதிக்கவேண்டும் எனத் தெரிவித்துள்ள பொதுச்சுகாதார சேவையின் பிரதிப்பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத், கொரோனா வைரஸ் நோயாளிகள் எவரையும் வீடுகளில் தனிமைப்படுத்தப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்குவதற்கான போதியளவு இடவசதி மருத்துவமனைகளில் உள்ளதாகவும் அவர் கூறினார்.

கொழும்பில் பெருமளவு நோயாளர்கள் தொடர்ந்தும் அடையாளம் காணப்படும் நிலையில் கொரோனா வைரஸ் நோயாளி எவருக்கும் வீட்டில்தனிமைப்படுத்தலை மேற்கொள்வதற்கோ சிகிச்சை பெறுவதற்கோ அனுமதி வழங்கப்போவதில்லை. அவர்களை உடனடியாக சிகிச்சை நிலையத்துக்கு கொண்டு செல்ல வேண்டும் என ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

அதிகளவில் நோயாளர்கள் கண்டுபிடிக்கப்படுகின்றனர்.ஆனால் மருத்துவமனையில் இடவசதி உள்ளது என தெரிவித்துள்ள அவர், கொரோனாவினால் பாதிக்கப்பட்டவர்கள் என உறுதிப்படுத்தப்பட்ட அனைவரையும்உடனடியாக தனிமைப்படுத்துவதற்கான நடவடிக் கைகளை எடுக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

# மன்னாரில் இதுவரையில் 182 பேருக்கு கொரோனா

மன்னார்,பெப்.03

மன்னார்மாவட்டத்தில்இதுவரை 182 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவுக்கான வைத்திய அதிகாரி கதிர்காமநாதன் சுதாகர் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில்நேற்றுக்காலை இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

“மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்ட நாள் முதல் தற்போது வரை 8 ஆயிரத்து 702 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் தற்போது வரை182 தொற்றாளர்கள்அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனவரியில் மாத்திரம்165 தொற்றாளர்கள்அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன், பெப்ரவரி தொடங்கி கடந்த இரண்டு நாட்களில் 75 பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் புதிய தொற்றாளர்கள் அடையாளம் காணப்படவில்லை.

தற்போது, மன்னார் மாவட்டத்தின் பஸார் பகுதி பாதுகாப்பான பிரதேசமாகவும், அதில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படாததால் மக்கள் அச்சமின்றி உரிய சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக நாளாந்த கடமைகளை மேற்கொள்ள முடியும்.

மேலும், அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் கொரோனா தொற்று தடுப்பு மருந்து ஏற்றும் நடவடிக்கை மன்னார் மாவட்டத்தில் சுகாதாரத் துறையினருக்கு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மன்னார் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்ட ஆயிரத்து 132 சுகாதாரப் பணியாளர்களில் 980 பேருக்கு தடுப்பு மருந்து செலுத்தப் பட்டுள்ளது”- என்றார். (எ)

# பி.சி.ஆர். பரிசோதனைகள் அதிகரிக்கப்பட வேண்டும்

## மருத்துவர் ஹரித வலியுறுத்து

கொழும்பு,பெப்.03

கொரோனா வைரஸ் தொற்று மேலும் வேகமாகப் பரவாதிருப்பதற்கு பி.சி.ஆர். பரிசோதனைகளின் அளவு அதிகரிக்கப்பட வேண்டும் என்பதோடு 7 - 8 மணித்தியாலங்களில் அதன் முடிவுகள் கிடைப்பதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும். அவ்வாறில்லை என்றால் தொற்றுப் பரவல் வேகமாக அதிகரிக்கக் கூடும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித அலுத்கே தெரிவித்தார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாட்டில் தற்போது சுமார் 40 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. ஒரு இலட்சத்து 22 ஆயிரத்துக்கும் அதிகமான நபர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் தொடர்பில் விஷேட கண்காணிப்பு செயல்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நபரை வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கு 3 - 4 நாள்கள் கால தாமதம் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. இந்நிலைமை மாற்றமடைய வேண்டும்- என்றார். (எ)

# ஆசிய அபிவிருத்தி வங்கியின் 55ஆவது மாநாடு இலங்கையில்

கொழும்பு, பெப். 03

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 55 ஆவது வருடாந்த மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு வங்கியின் நிர்வாகசபை அனுமதி வழங்கியுள்ளது.

எதிர்வரும் 2022ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதிவரை இந்த மாநாடு இலங்கையில் நடைபெறவுள்ளது.

இதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

# ஜனாதிபதி கோட்டாபயவுக்கு ஆதரவு கொடுப்பதற்கு தயார்

*அர்ஜுன ரணதுங்க தெரிவிப்பு*



கொழும்பு, பெப். 03

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கைகள் சிறப்பானதாக அமையும் பட்சத்தில் அவருக்கு ஒத்துழைப்பு வழங்குவேன் என்று இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினருமான அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

எதிர்கால அரசியல் நகர்வுகள் தொடர்பில் விவரிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நான் தற்போது ஐக்கிய தேசியக்கட்சியிலேயே அங்கம் வகிக்கின்றேன். அக்கட்சி எடுக்கும் முடிவுகளின் அடிப்படையிலேயே தொடர்ந்தும் அங்கம் வகிப்பதா, வெளியேறுவதா என்பது குறித்து தீர்மானம் எடுக்கப்படும். நான் மக்களுடன், மக்களுக்காகவே அரசியல் நடத்துகின்றேன்.

நாட்டை நேசிக்கும் அரசியல்வாதிகளே எமக்கு தேவைப்படுகின்றனர். இதன்காரணமாகவே எப்போதும் நல்ல அரசியல்வாதிகளுடன் பயணத்தை தொடர்ந்தேன்.

கோட்டாபய ராஜபக்ஷ எனது சகோதரர் போன்றவர். ராஜபக்ஷக்களுடன் எமக்கு நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. மஹிந்த ராஜபக்ஷவே இந்நாட்டிலுள்ள புகழ்மிக்க அரசியல்வாதியாவார். எனது பிறந்த நாளன்று அவரே என்னை முதலில் வாழ்த்துவார். நாமும் அவருக்கு உரிய வகையில் கௌரவம் செலுத்துவோம். ஆனால் அரசியல் கொள்கை ரீதியில் சிற்சில முரண்பாடுகள் உள்ளன.

அதேவேளை, ரணதுங்க குடும்பத்தினரை இரண்டாக்கியதற்கும் ராஜபக்ஷ குடும்பம் பொறுப்பு கூறவேண்டும். எனது குடும்பத்தில் அரசியல் ரீதியில் சிற்சில பிரச்னைகள் இருந்தாலும் உறவு என்பது முழுமையாக நீங்கவில்லை என்பதனையும் கூறியாகவேண்டும். நாம் வளர்ச்சியடைய வேண்டும். அதேபோல எம்மை எவரும் சந்தர்ப்பத்துக்காக பயன்படுத்திக்கொள்ளாமல் இருப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். என்னை எவரும் சந்தர்ப்பத்துக்காக பயன்படுத்த முடியாது. இது அரசியல் தலைவர்களுக்கும் தெரியும்.

நான் நல்லவர்களுடன் பயணிப்பேன். எனவே, கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கை சிறந்ததெனில் நாளை அவருக்கும் ஒத்துழைப்பு வழங்குவேன். பதவிகளை எதிர்பார்த்து அரசியல் நடத்துபவன் நான் அல்லன்-என்றார்.

# தமிழரின் போராட்டத்தை கொச்சைப்படுத்தாதீர்கள்!

## அமைச்சர்களிடம் மைத்திரி வலியுறுத்து



கொழும்பு, பெப்.03

**“தீர்வுக்காகவும் நீதிக்காகவும் தமிழர்கள் ஜனநாயக வழியில் போராடினால் அந்தப் போராட்டத்தை எவரும் கொச்சைப்படுத்தக்கூடாது. தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்குத் தீர்வையும், பல்வேறு இன்னல்களினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதியையும் வழங்குவது ஆட்சியாளர்களின் கடமையாகும். அப்போதுதான் நாட்டில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்.”**

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு தமிழர்கள் அரசுக்கு எதிராகப் போராட்டங்கள் -ஆர்ப்பாட்டங்கள் நடத்தி எதைச் சாதிக்கப் போகின்றார்கள் என்று அமைச்சர்கள் சிலர் எழுப்பியுள்ள கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த எமது ஆட்சியில் தமிழர்களின் மனதை நாம் வென்றிருந்தோம். அதேவேளை, சர்வதேச சமூகத்தின் மனதையும் வென்று காட்டியிருந்தோம். ஆனால், இந்த ஆட்சியில் அவற்றை ஏன் சாதிக்க முடியாமல் உள்ளது என்பது தொடர்பில் அரசு ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதைவிடுத்து இன முறுகலை மேலும் வலுவடையைச் செய்யும் விதத்திலும், சர்வதேச மட்டத்தில் நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையிலும் அரசிலுள்ள சிலர் கருத்துக்கள் வெளியிடுவதை உடன் நிறுத்த வேண்டும்.

இது தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இருவரும் கவனம் செலுத்த வேண்டும். பிரச்னைகளை ஏற்படுத்த முனைவோரை ஜனாதிபதியும் பிரதமரும் தூரத்தில் வைத்திருக்க வேண்டும். அவர்களைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு ஆட்சியைத் திறம்பட முன்னெடுக்க முடியாது.

இந்த அரசில் நாம் முக்கிய பங்காளிக் கட்சியாக இருக்கின்றோம். ஆனால், எமது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஓரங்கட்டுவதில் அரசிலுள்ள மேற்படி உறுப்பினர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் செயற்பட்டுக்கொண்டு வருகின்றனர். அவர்கள் எமக்கும் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கும் இடையில் பிரச்னைகளை ஏற்படுத்துவதில் குறியாக உள்ளனர். ஆனால், நாம் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் உரிய கௌரவத்தை வழங்கி வருகின்றோம்.

நாடு இன்று நாலா புறங்களிலிருந்தும் நெருக்குவாரங்களைச் சந்திக்கத் தொடங்கியுள்ளது. இதிலிருந்து நாட்டை மீட்டெடுக்க ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இருவருக்கும் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்க நாம் தயார். ஆனால், நாட்டின் முக்கிய இடங்களை சர்வதேச நிறுவனங்களுக்குத் தாரைவார்க்க நாம் சம்மதிக்க மாட்டோம்-என்றார்.

# சம்பள உயர்வு போராட்டத்துக்கு அனுசா சந்திரசேகரனும் ஆதரவு



கொழும்பு, பெப். 03

தொழிலாளர்களின் நியாயமான சம்பள உயர்வுக்காக மாத்திரமன்றி அவர்களின் ஏனைய அடிப்படை உரிமைகளுக்காகவும் அதேபோல் எமது ஒட்டுமொத்த சமூகத்தின் உரிமைகளுக்காகவும் நேர்மையுடன் செயற்படும் அனைத்து சக்திகளுக்கும் நாம் நிச்சயம் ஆதரவு நல்குவோம் என்று அண்ணா சந்திரசேகரன் தொழிலாளர் முன்னணியின் பொதுச் செயலாளர்சட்டத்தரணி அனுஷா சந்திரசேகரன் தெரிவித்தார்.

எமது எந்த பிரச்னைகளும் ஒரு குறிப்பிட்ட காலத்துடன் முற்றுப்பெறுவதில்லை. இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு எமது நேர்மையான செயற்பாடுகளினால் அனைத்து சக்திகளையும் இணைத்துக் கொண்டு எம் சமூக உரிமையை வென்றெடுப்பதில் நான் உறுதியோடு செயற்படுவேன் எனவும் அவர் கூறினார்.

# வவுனியாவில் வள்ளுவர் நினைவு தினம் நேற்று

வவுனியா, பெப். 03

திருவள்ளுவர் நினைவு தினம் வவுனியா வைத்திய சாலை சுற்று வட்ட வீதியில் அமைந்துள்ள அவரது நினைவுச் சிலையடியில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது அவரது சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் உபநகரபிதா சு. குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழருவி சிவகுமாரன் திருவள்ளுவர் தொடர்பான சிறப்புரை நிகழ்த்தினார். நிகழ்வில் நகரசபை உறுப்பினர்களான,நா. சேனாதிராஜா, ரி.கே. ராஜலிங்கம், சு. காண்டீபன், செயலாளர் இ. தயாபரன், சமூக ஆர்வலர் சந்திரகுமார், நகரசபை ஊழியர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# நிபந்தனைகளை ஏற்கும் தரப்புக்கு மேற்கு முனையத்தை வழங்கலாம்

*அரசு ஆராய்கின்றது என்கிறார் ஹெகலிய*



கொழும்பு, பெப். 03

தேவை ஏற்படின் மேற்கு முனையத்தை இலங்கையின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளும் தரப்பினருக்கு வழங்குவது குறித்து ஆராய்ந்து பார்க்க முடியும் என அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை முழுமையாக இலங்கை துறைமுக அதிகார சபையின் கீழ் வைத்துக்கொள்ள அமைச்சரவைத் தீர்மானித்துள்ளது.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்வதற்காக இலங்கை, இந்திய, ஜப்பான் நாடுகளுக்கிடையிலான பங்களிப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. குறித்த உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய இந்தியாவின் முதலீட்டாளரால் சமர்ப்பிக்கப்பட்ட முதலீட்டு முன்மொழிவை பகுப்பாய்வு செய்வதற்காக பேச்சு உடன்பாட்டுக் குழுவொன்றை நியமிப்பதற்கு 2020ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

# மூன்று இலங்கையர்கள் சென்னையில் கைது!

சென்னை,பெப் 03

பாதாள உலக குழு தலைவர்களில் ஒருவரான கிம்புலா எலே குணாவும் அவரது மகனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், மேலும் ஒரு பாதாளக் குழு உறுப்பினரான பும்பா என்ற சந்தேக நபரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த மூவரும் சென்னையில் வைத்தே கைது செய்யப்பட்டுள்ளனர் என அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கைது செய்யப்பட்டுள்ள குறித்த மூவரும் இரகசிய இடமொன்றில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கிளிநொச்சியில் போராட்டம்

## 6ஆம் திகதி வரை முன்னெடுக்க தீர்மானம்

**கிளிநொச்சி,பெப்.03**

**கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் தொடர் போராட்டம் நேற்றுக் காலை ஆரம்பமானது.**



நேற்று முற்பகல் 11 மணியளவில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக இந்தப் போராட்டம் ஆரம்பமானது.

சுழற்சி முறையிலான இந்தப் போராட்டம் எதிர்வரும் 6ஆம் திகதிவரை முன்னெடுக்கப்படவுள்ளது.

நேற்றைய போராட்டத்தில் கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் இருந்து வந்த வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள்கலந்துகொண்டனர்.

தமது பிள்ளைகள் விடுதலை செய்யப்படவேண்டும் என வலியுறுத்திய போராட்டக்காரர்கள், சர்வதேசம் நீதியை பெற்றுத்தர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## இலங்கை ரூபாவின் பெறுமதி உயர்வு

கொழும்பு, பெப். 03

அண்மைக்காலமாக தொடர்ந்து வீழ்ச்சி அடைந்து வந்த இலங்கை ரூபாவின் பெறுமதி மீண்டும் வலுவடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதற்கமைய நேற்று முன்தினம் இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட நாணய மாற்று வீதத்திற்கமைய இந்த விடயம் வெளியாகியுள்ளது.

நேற்று முன்தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 193.17 ரூபாவாகப் பதிவாகியுள்ளது.

கடந்த வாரம் 200 ரூபா வரை அமெரிக்க டொலர் விலை அதிகரித்த நிலையில் நேற்று முன்தினம் குறைவடைந்துள்ளது.

அத்துடன் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 188.63 ரூபா வரை குறைவடைந்துள்ளதாகவும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

# எமது மொழியையும், மதத்தையும் மதிக்காத இலங்கையை சுதந்திர நாடாக ஏற்கமுடியாது

## மனோ கணேசன் அறிவிப்பு

கொழும்பு, பெப். 03

"எமது மொழியையும், மதத்தையும் மதிக்காத இன்றைய இலங்கையை ஒரு சுதந்திர நாடாக ஏற்றுக்கொள்ள முடியாது." - என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

எங்கள் மொழிக்கும், மதத்துக்கும், இனத்துக்கும், இலங்கை நாட்டுக்குள்ளே கௌரவமான இடம் தராத இன்றைய இலங்கையை ஒரு சுதந்திர நாடாக ஏற்றுக்கொள்ள முடியாது.

தமிழர்களையும், முஸ்லிம்களையும் மொழி, மத, இன அடிப்படைகளில் தூரத்தள்ளி வைத்து, இரண்டாம், மூன்றாம் தர பிரஜைகளாக நடத்தும் இன்றைய அரசாங்கத்துக்குள் அடைக்கலம் புகுந்து, இந்த இனவாத அரசுக்கு ஒரு ஏற்புடைமை ஏற்படுத்தி, இதை ஒரு சுதந்திர நாடாக காட்ட முயலும் தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகளை வரலாறு ஒருபோதும் மன்னிக்காது.

65 வருடங்களுக்கு பிறகு, கடந்த எமது நல்லாட்சியில், நாம் முன்னின்று போராடிப் பெற்ற, தமிழ்த் தேசிய கீதம் பாடும் உரிமையை, இடைநிறுத்தி விட்டு, இவர்கள் கொண்டாடும் சுதந்திர நிகழ்வுக்கு, எமக்கு விடுக்கப்பட்ட அழைப்பை நாம் ஏற்க மாட்டோம்.

எமது இருப்பிடங்களில், நாம் எமது சுதந்திர உணர்வை கொண்டாடுவோம். தமிழ் மொழிக்கு உரிய மரியாதையை தராத இலங்கை முழுமையான இலங்கை நாடல்ல.

சிங்களத்தில் மட்டுமே தேசிய கீதமாம். இறுமாப்பாக சொல்கிறார்கள். தமிழில் பாடினால் மட்டும் அதனால், தமிழ் பேசும் இலங்கையர் வீடுகளில் தேனும், பாலும் ஓட போவதில்லை. இதன் மூலம் குடி எழும்பியும் விடாது. குடி முழுகியும் விடாது.



ஆனால், நாட்டை ஒன்றுபடுத்த கடவுள்தந்த, "ஒரே மெட்டு, ஒரே அர்த்தம்" கொண்ட இரண்டு தேசிய கீதங்களையும் கூட ஒரு சேர பாட முடியாத அளவில் இவர்கள் இனவாதத்தில் ஊறி போய் உள்ளார்கள். அமெரிக்கா உட்பட்ட மேலை நாடுகளில் இனவாதம் தோலின் நிறத்தில் உள்ளது. இலங்கையில் இங்கே அது ஆன்மாவில் ஊறியுள்ளது.

முன்னாள் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் என்ற முறையில், நான், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரிடம் கடைசி நிமிட அழைப்பாக, "இலங்கை தாயை போற்றும், தமிழிலான தேசிய கீதத்தையும் பாடி, தேசிய ஒருமைப்பாட்டை கட்டியெழுப்பி, நாம் முன்னோக்கி செல்வோம். அதன்மூலம், நாமும் இந்நாட்டுக்கு உடைமையாளர்கள் என்ற உணர்வை தமிழ் பேசும் சுமார் ஐந்து மில்லியன் இலங்கையர்களின் மனங்களில் ஏற்படுத்துவோம்" என கூறியிருந்தேன்.

ஆனால், இவர்களை திருத்த முடியவில்லை. உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் எவ்வளவு அடிவாங்கினாலும், திருந்தா ஜென்மங்கள். பல வர்ண பூக்கள் நிறைந்த பூங்கா எவ்வளவு அழகாக இருக்கும் என்பதை உணர தெரியாத பிற்போக்குவாதிகள்.

எங்கள் மொழிக்கும், மதத்துக்கும், இனத்துக்கும், இலங்கை நாட்டுக்குள்ளே கௌரவமான இடம் தராத இன்றைய இலங்கையை ஒரு சுதந்திர நாடாக ஏற்றுக்கொள்ள நாம் தயாரில்லை என இவர்களுக்கு உணர்த்துவோம்- என்றார்.




# மங்களவின் நகர்வுகள் மீது ஆளுந்தரப்பு கழுகுப்பார்வை

கொழும்பு, பெப். 03

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் நகர்வுகள் தொடர்பில் அரசாங்கமும், அரச சார்பு அமைப்புகளும் கழுகுப்பார்வை செலுத்தியுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தெற்கு அரசியலில் ஆட்சியை தீர்மானிக்கும் முக்கிய புள்ளிகளில் ஒருவராக மங்கள சமரவீர திகழ்ந்தார். சர்வதேச மட்டத்தில் அவருக்கு பாரியதொரு வலைப்பின்னல் இருக்கின்றது.

பௌத்த தேரர்கள் சிலரின் செயற்பாடுகளை வெளிப்படையாக விமர்சித்ததாலும், அவர் பௌத்த மதத்துக்கு எதிரானவர் என்ற தொனியில் மொட்டு கட்சியினர் பரப்புரைகளை முன்னெடுத்ததாலும் பௌத்தர்கள் மத்தியில் மங்களவுக்கான செல்வாக்கு சரிந்துள்ளது. பாராளுமன்ற அரசியலுக்கு மங்கள விடை கொடுப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும். ஆனாலும் சர்வதேச மட்டத்தில் மங்களவுக்கான செல்வாக்கு குறையவே இல்லை. அவரை ஜனநாயகப் போராளியாகவே மனித உரிமை செயற்பாட்டாளர்கள் பார்க்கின்றனர்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக ஜோ பைடன் பதவியேற்றுள்ளார். முக்கிய பதவிகளுக்கு இராஜதந்திரதுறையில் தேர்ச்சி



பெற்றவர்களை நியமித்து வருகின்றார். சமந்தா பவர் உட்பட இலங்கைக்கு நெருக்கடி கொடுத்த பலர் முக்கிய பதவிகளுக்கு தெரிவாகியுள்ளனர்.

அமெரிக்காவின் ஜனநாயகக் கட்சி ஆட்சியானது, கொழும்புக்கு தலையிடியையும், நெருக்கடியையும் கொடுக்கும் ஆட்சியாகும். ஜெனிவாவில் பிரேரணைகள் நிறைவேறுவதற்குகூட ஜனநாயக கட்சியின் ஆட்சியே காரணமாக அமைந்தது. மங்களவுக்கு நெருக்கமான பலர் ஜனநாயகக் கட்சியில் இருக்கின்றனர்.

மறுபுறத்தில் மங்கள பலமானதொரு சிவில் அமைப்பை உருவாக்கி வருகின்றார். இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மங்களவின் நகர்வுகள் தீவிரமாக கண்காணிக்கப்படுகின்றன.

# தென் மாகாணத்தின் ஆளுநருக்கு தொற்று

கொழும்பு, பெப். 03

தென் மாகாண ஆளுநர் பேராசிரியர் விலி கமகேவுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவருடைய தனிப்பட்ட செயலாளருக்கு இதற்கு முன்னர் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து அவர் சுய தனிமைப்படுதத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



# வடக்கில் நுண்நிதிக் கடனில் சிக்கியுள்ளோருக்கு சலுகை

## யாழ்ப்பாணத்தில் நலன்புரி நிலையங்களில் உள்ளோரை மீள்குடியமர்த்த துரித நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப். 03

**வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் நுண்நிதிக் கடனில் சிக்கியுள்ள மக்களுக்கு இலகு கடன் திட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுக்க அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.**

பல்வேறு நுண்நிதிக் கடன் முறைகள் மூலம் கடன்களைப் பெற்றுச் சிக்கியுள்ள குறைந்த வருமானமுடைய கிராமிய மக்களை குறித்த கடன்பிடியிலிருந்து விடுவிப்பதற்காக கூட்டுறவு கிராமிய வங்கி மற்றும் சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கம் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள குறைந்த வட்டியுடன் இலகு கடன் வழங்கல் திட்டம் வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் 6 மாவட்ட செயலகங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

வடக்கு மாகாணத்துக்கு 292 மில்லியன் ரூபாக்களும் வடமத்திய மாகாணத்துக்கு 250 மில்லியன் ரூபாக்களும் அடங்கலாக மொத்தம் 542 மில்லியன் ரூபா நிதி சுழற்சி முறை நிதியாகப் பயன்படுத்தப்படுகிறது.

கடன் பிடியில் சிக்கியுள்ள மக்களுக்கு சலுகை வழங்குவதற்கு குறித்த சுழற்சிமுறை நிதியைப் பயன்படுத்தி கடனுதவித் திட்டத்தை நடைமுறைப்படுத்தவும் அதன்கீழ் தற்போது வழங்கப்படும் அதிகபட்ச கடன் தொகையை ஒரு லட்சம் ரூபா வரை அதிகரிப்பதற்கும் குறித்த கடன் திட்டத்துக்கான அதிகபட்ச வருடாந்த வட்டி வீதத்தை 9 சதவீதத்திலிருந்து 6 சதவீதத்துக்கு குறைப்பதற்கும் நிதி அமைச்சராக பிரதமர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நலன்புரி முகாம்களில் வாழும் காணியில்லாத குடும்பங்களை மீளக் குடியமர்த்தல் யாழ். மாவட்டத்தில் நலன்புரி முகாம்களில் வாழும் காணி இல்லாத 381 குடும்பங்களுக்கு பிரதம விலை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 7 லட்சம் ரூபா 20 பேர்ச் காணித் துண்டை வழங்குவதற்கு இதற்கு முன்னர் அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

யாழ். மாவட்டத்தில் தற்போது நலன்புரி நிலையங்களில் வாழும் 409 குடும்பங்களில் 233 குடும்பங்களுக்கு காணியில்லை என்பது அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், தங்களது பிறந்த இடத்துக்கு அண்மையாக காணி வழங்குமாறு அவர்கள் கேட்டுள்ளனர்.

ஆனாலும் அவர்கள் கோரும் இடங்களில் 7 லட்சம் ரூபா பெறுமதிக்கு 20 பேர்ச் காணித்துண்டைப் பெறுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

அதனால் குறித்த தொகைக்கு அதிகரிக்காமல் அரச விலை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டுக்கு அமைய 10 தொடக்கம் 20 பேர்ச் காணித்துண்டை தனியாரிடம் இருந்து கொள்வனவு செய்து வழங்குவதற்கும் தொடர்ந்து வீடுகளை நிர்மாணிப்பதற்கான பொறிமுறையை தயாரித்து இடம் பெயர்ந்த குடும்பங்களை துரிதமாக மீள்குடியமர்த்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராக பிரதமர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.





# கொரோனாவால் முதல் மருத்துவரை இழந்தது இலங்கை

## மருத்துவர் கஜன் உயிரிழப்பு

கொழும்பு, பெப் 03

கொவிட் -19 நோயால் முதலாவது மருத்துவரை இலங்கை இழந்துள்ளது.

காலியில் உள்ள கராப்பிட்டி மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த மருத்துவர் கஜன் தந்தநாராயணன் (வயது-31) நேற்று காலை காலமானார் என்று அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மருத்துவர் ஹரித அளுத்கே தெரிவித்தார்.

கொவிட் -19 நோயால் பாதிக்கப்பட்டிருந்த மருத்துவர் கஜன் தந்தநாராயண ஒரு வாரத்துக்கு மேலாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

நுகேகொடையில் உள்ள லைசியம் இன்ரர்நஷனல் பாடசாலை பழைய மாணவரான மருத்துவர் கஜன், சீனாவில் மருத்துவ பட்டம் பெற்றார்.

கொவிட் -19 நோய்த் தொற்று ஏற்படும்வரை ராகமவிலுள்ள கொழும்பு வடக்கு போதனா மருத்துவமனையில் பணியாற்றினார்.

மருத்துவர் ஆரம்பத்தில் கொழும்பு தேசிய தொற்று நோய் வைத்தியசாலையில் (ஐ.டி.எச்) அனுமதிக்கப்பட்டார். ஆனால் கொவிட்- 19 நோயுடன் நிமோனியா மற்றும் நீரிழிவு காரணமாக அவர் அதிதீவிர சிகிச்சை பெற்று வந்தார்.

இதன் விளைவாக, மேலதிக சிகிச்சைக்காக கராப்பிட்டி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

அவருக்கு பல மாவட்டங்களையும் சேர்ந்த மருத்துவ வல்லுநர்கள் சிகிச்சை வழங்கிப் போராடி வந்தனர். எனினும் அவரது உயிர் நேற்று காலை பிரிந்தது.

மருத்துவரின் குடும்ப உறுப்பினர்கள் பலருக்கு கொரோனா வைரஸ் பாதித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

# தோட்டத் தொழிலாளர்கள் சம்பள உயர்வுக்காக பணிப் பகிஷ்கரிப்பு

கொழும்பு, பெப். 03

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1000 ரூபாயாக உயர்த்துமாறு கோரி நாடளாவிய ரீதியிலான ஒருநாள் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டமொன்றை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுவரை தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக உயர்த்துவது தொடர்பில் அரசாங்கம் மற்றும் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துக்கு இடையில் சில சுற்றுப் பேச்சுகள் நடைபெற்றபோதும் அவை தீர்மானமற்ற நிலையில் முடிவுக்கு வந்தன.

இந்த நிலையிலேயே எதிர்வரும் 5ஆம் திகதி நாடளாவிய ரீதியிலான ஒருநாள் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டமொன்றை மேற்கொள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

இதேவேளை, தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக உயர்த்துமாறு கோரி தோட்டத் தொழிலாளர்கள், இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்துடன் இணைந்து புளத்சிங்ஹல நகரத்தில் நேற்றுமுன்தினம் எதிர்ப்புப் போராட்டமொன்றை மேற்கொண்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# வெள்ளத்தினால் பாதிக்கப்படும் கிளிநொச்சி தெளிகரை மக்கள்

கிளிநொச்சி, பெப். 03

கிளிநொச்சி பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தெளிகரைப் பகுதியில் புதிதாக குடியேற்றப்பட்ட மக்கள் மழை காலம் முடிந்தும் வெள்ளத்திலிருந்து மீளமுடியாத நிலையில் வாழ்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தெளிகரை மக்கள் இவ்வாறு வருடம் தோறும் வெள்ளத் தேக்கத்தில் சிக்கித் தவிப்பதாக தெரிவிக்கின்றனர். மன்னார்-யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள இந்தக் குடியிருப்புப் பகுதியில் வெள்ளம் தேங்கி உள்ளது. மழை வெள்ள அனர்த்தம் முடிந்து நீண்ட நாட்களாகியும் அந்தப் பகுதி மக்கள் வெள்ள அனர்த்தத்திலிருந்து மீள முடியாத நிலையில் உள்ளனர்.

தம்மை அந்தப் பகுதியில் குடியேற்றும்போது அப்பகுதி பள்ளமான பகுதி எனவும், அதனை அபிவிருத்தி செய்து தருவதாகத் தெரிவிக்கப்பட்டது என்றும் வருடம் தோறும் இவ்வாறான வெள்ள நிலையிலேயே தாம் வாழ்வதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இதேவேளை, வீடமைப்பு அதிகார சபையினால் வழங்கப்பட்ட இந்த வீட்டுத்திட்டமும் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளதாகவும், தமது பிரச்னைகளுக்கு தீர்வு பெற்றுத்தர எவரும் முன்வரவில்லை எனவும் அவர்கள் குற்றச்சாட்டியுள்ளனர்.

(அ)

# சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்காது




கொழும்பு, பெப். 03

சமையல் எரிவாயு கொள்கலனின் விலையை அதிகரிக்குமாறு சமையல் எரிவாயு நிறுவனம் ஒன்று முன்வைத்த கோரிக்கையை நுகர்வோர் விவகார அதிகார சபை நிராகரித்துள்ளது.

12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயு கொள்கலன் ஒன்றின் விலை தற்போது ஆயிரத்து 493 ரூபாவாக காணப்படும் நிலையில் அதனை ஆயிரத்து 900 ரூபாவாக அதிகரிக்குமாறு அந்த நிறுவனம் கோரியிருந்தது.

உலக சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டி இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

எனினும் அது குறித்த விலைகள் தொடர்பான விவரங்களை குறித்த நிறுவனம் வழங்காமை காரணமாக விலை அதிகரிப்புக்கான கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# 95ஆயிரத்து 550 பேருக்கு இதுவரை தடுப்பூசிகள்

கொழும்பு, பெப். 03

நாட்டில் இதுவரை 95 ஆயிரத்து 550 பேருக்கு ஒக்ஸ்போர்ட் அஸ்ரசெனிகா கொவிஷீல்ட் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு இதனை தெரிவித்துள்ளது.

கடந்த 29 ஆம் திகதி முதல் இந்த தடுப்பூசி செலுத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் நேற்று முன்தினம் மாத்திரம் 36 ஆயிரத்து 396 பேருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளதாக தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.



# துறைமுக கிழக்கு முனைய விவகாரம்:

# இந்தியாவின் அழுத்தமும் அரசின் முடிவும்

- பார்த்தீபன் -

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் 49 வீதமான பங்கை இந்தியாவுக்கு வழங்குவதென்ற தமது முன்னைய முடிவிலிருந்து இலங்கை திடீரெனப் பின்வாங்கியிருப்பது புதுடில்லிக்குப் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கின்றது. இறுதி நிமிடத் தில் கூட, புதுடில்லியால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை கொழும்பினால் கவனத்திற்கொள்ளப்படவில்லை.

இந்தியாவைச் சமாதானப்படுத்துவதற்காக துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் 85 வீதமான பங்குகளை வழங்கத் தயாராகவிருப்பதாக, கொழும்பு புதிய யோசனை ஒன்றை டில்லியிடம் இப்போது முன்வைத்திருப்பதாக உத்தியோகப்பற்றற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனை புதுடில்லி ஏற்றுக்கொள்ளுமா - பரிசீலனை செய்யுமா என்பது உடனடியாகத் தெரியவில்லை.

எது எப்படியிருந்தாலும், கடந்த வாரத்தில் கோவிற் 19 தடுப்பூசியை வழங்கும் போது இரு நாடுகளுக்கும் இடையில் காணப்பட்ட நெருக்கமான உறவுகளில், இச்சம்பவம் ஒரு கீறலை ஏற்படுத்தியிருக்கின்றது. இறுதிவேளையில், இந்தியத் தூதரகப் பேச்சாளரின் அறிக்கை இந்தியாவின் ஏமாற்றத்தை வெளிப்படுத்தியது.

கிழக்கு முனையம் விவகாரத்தில் சிங்களத் தேசியவாதிகள் தடைபோடமுற்படுவார்கள் என்பது இந்தியா எதிர்பார்த்த ஒன்றுதான். ஆனால், 5 இலட்சம் தடுப்பூசிகளை இலவசமாக வழங்குவதன் மூலம், இந்தியா குறித்து காணப்படும் எதிர்ப்புணர்வுகளை குறைக்க முடியும் என்ற எதிர்பார்ப்பு புதுடில்லியிடம் இருந்தது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் இதே போன்ற எதிர்பார்ப்புடன் இருந்திருக்கலாம். அதனால்தான், நேரில் விமான நிலையம் சென்று தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டார். அதனைவிட அந்த விடயத்துக்கு அதிகளவு விளம்பரத்தையும் ஜனாதிபதி தரப்பு கொடுத்திருந்தது.

இதன் மூலம் இந்தியா குறித்த அச்சத்தை ஓரளவுக்குப் போக்கி, அமைச்சரவையில் இதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுவிட முடியும் என்பது ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாக இருந்திருக்கலாம். இந்தியாவின் பாதுகாப்புச் செயலாளர் அஜித் டோவால், வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ஆகியோர் இலங்கைக்கு அண்மையில் மேற்கொண்ட விஜயங்களும் கிழக்கு முனைத்தைப் பெற்றுக்கொள்வதை மையப்படுத்தியதாகவே இருந்தது.

அம்பாந்தோட்டை துறைமுகமும், கொழும்பு துறைமுக நகரமும் சீனாவிடம் கொடுக்கப்பட்டிருக்கும் நிலையில், கிழக்கு முளையத்தைப் பெற்றுக்கொள்வதன் மூலமாகவே அதனை ஓரளவுக்காவது சமப்படுத்த முடியும் என்ற எதிர்பார்ப்பு இந்தியாவுக்கு இருந்தன.

அதனைவிட அதிலுள்ள பொருளாதார முக்கியத்துவங்களும், இந்தியா அதனைக் கையகப்படுத்த எடுத்த முயற்சிகளுக்குக் காரணம். இப்போது கிழக்கு முனையத்தை முழுமையாக இலங்கைத் துறைமுக அதிகார சபைதான் அபிவிருத்தி செய்யும் என அமைச்சரவை ஒப்புதல் அளித்திருக்கும் நிலையில். இந்தியாவின் அடுத்த கட்ட நகர்வு என்னவாக இருக்கும் என்ற கேள்விக்கான பதில் உடனடியாகத் தெரியவில்லை.

அமெரிக்காவின் ஆசியோடு கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் 500 பில்லியன் அமெரிக்க டொலர் செலவில் நடைமுறைப்படுத்த திட்டமிட்ட இந்த மூன்றாண்டு திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியா, ஜப்பான், இலங்கை ஆகியநாடுகள் கைச்சாத்திட்டிருந்தன. இந்தத் திட்டத்தில் 51 வீத பங்குகள் இலங்கை துறைமுக அதிகார சபையிடம் இருக்கும், எனவும், ஏனயவையே இந்திய மற்றும் ஜப்பான் நாடுகளிடையே பங்கிடப்படும் எனவும் தெரிவிக்கப் பட்டிருந்தது. அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதனைக் கடுமையாக எதிர்த்தமையால், இழுபறி நிலை ஏற்பட்டது.

அதனைவிட அப்போது எதிர்க்கட்சியாக இருந்த பொதுஜன பெரமுனவும் இதனைக் கடுமையாக எதிர்த்தது. நாட்டின் தேசிய வளங்களை அந்நியர்களுக்கு விற்பதாக தொழிற்சங்கங்களின் ஆதரவோடு பலத்த எதிர்ப்பை வெளியிட்ட பொதுஜன பெரமுனவுக்கு இந்த விவகாரம் இப்போது அரசாங்கத்தை அமைத்த பின்னர் பூமராங் ஆக திருப்பித் தாக்கியுள்ளது.

2018 இல் உலகின் முக்கியமான கொள்கலன் வழித்தடத்தடத் துறைமுகங்கள் 30இல் முதலிடத்தை இலங்கை பெற்றிருந்தது. இரண்டாம் இடத்தை சிங்கப்பூர் பெற்றிருந்தது. அல்பா லைனர் இந்தத் தரப்படுத்தலை மேற்கொண்டது. எனவே இலங்கையின் மிக ஆழமான துறைமுகப் பகுதியான கிழக்கு முனையத்தின் நூறு வீதமான பங்குகளும் தம்மிடையே இருக்கவேண்டுமென்று துறைமுக அதிகாரசபை வாதாடுகிறது.

2013 ஆம்ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஓர் உடன்படிக்கையின்படி கொழும்புத் துறைமுகத்தின் முக்கிய மூன்று முனையங்களின் நடவடிக்கைகளை நிறைவேற்றும் தென்னாசிய நுழைவாசல் முனையத்தின் 85 வீத பங்குகள் சீனாவின் வசம் இருக்கையில் 15 வீத பங்குகளை மாத்திரமே இலங்கை துறைமுக அதிகாரசபை கொண்டிருந்தது. அப்போது ஏற்படாத எதிர்ப்பலை தற்போது எழுந்துள்ளதால் இதன் பின்னணியில் சீனாவே இருப்பதாக இந்தியா கருதுவதாகத் தெரிகின்றது.

இந்த முனையத்தில் கொள்கலன்களை ஏற்றி இறக்கும் கிரேன்களின் வலுவானது சாதாரண வலுவைவிட மிக அதிகளவில் உள்ளதால் ஓர் இராணுவத் தேவைக்கு இந்தமுனையம் சீனாவால் பயன்படுத்தப்படலாம் என்ற அச்சம் இந்தியத் தரப்புக்கு உள்ளது. இதனால் கிழக்கு முனையம் மூலம் தன் இருப்பைத் தக்கவைக்க இந்தியா பகீரதப்பிரயத்தனம் செய்கிறது.

அண்மையில் இலங்கை வந்த இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் 13 ஆவது திருத்தச் சட்டம், மாகாண சபைகள், ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் தமிழ்மக்களின் நலன்கள் என்ற அஸ்திரங்களைப் பலமாகப் பிரயோகித்திருந்தார். இந்த அழுத்தங்களின் பின்னணியில் இருந்தது கிழக்கு முனையம் என்பதுதான் இராஜதந்திரிகளின் கருத்து. ஏற்கனவே செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி செயற்படுவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் கடந்த வாரம் உறுதியளிததிருந்தார்.

இது தொடர்பான அமைச்சரவைத் தீர்மானம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நிறைவேற்றப்படவிருந்த நிலையில்தான் - அதற்கு எதிரான போராட்டங்கள் வலுவடைந்தன. அமைச்சரும், ஆளும் கூட்டணியின் பங்காளிக் கட்சி ஒன்றின் தலைவருமான விமல் வீரவன்ச அவசரமாக நடத்திய கூட்டம் அரசின் நிலைப்பாடு திடீரென மாற்றமடைவதற்கு பெருமளவு செல்வாக்கைச் செலுத்தியிருந்தது. ஆளும் கூட்டணியிலுள்ள 10 கட்சிகளின் தலைவர்களை அவசரமாகக் கூட்டிய விமல் வீரவன்ச, கிழக்கு முனையத்தை இந்தியாவுக்குக் கொடுக்கக்கூடாது என்ற தீர்மானத்தை நிறைவேற்றினார். அரசாங்கம் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டும் என தமது கோரிக்கையை அவர்கள் நியாயப்படுத்தினார்கள்.

அரசுக்கு அதிகளவு அழுத்தத்தை இந்தத் தீர்மானம் கொடுத்த அதே வேளையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், கிழக்கு முனையம் முற்று முழுதாக துறைமுக அதிகார சபையிடமே இருக்கும் என நேற்று முன்தினம் காலை அறிவித்தார். அமைச்சரவை கூடுவதற்கு முன்னர் பிரதமர் வெளியிட்ட இந்த அறிவிப்பு இந்தியாவுக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருந்தது.

உடனடியாகவே, இந்தியத் தரப்பிலிருந்து ஓர் அறிக்கை வெளியிடப்பட்டது. “2019 மே மாதம் இலங்கை - இந்தியா - ஜப்பான் ஆகிய நாடுகளிடையே செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்” என இந்தியத் தூதரகப் பேச்சாளர் ஒருவர் சொன்னதாக பி.ரி.ஐ. வெளியிட்ட செய்தி, நிலைமைகளை இந்தியா உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருப்பதை உறுதிப்படுத்தியது. ஆனால், அமைச்சரவையின் முடிவில் இந்தியத் தரப்பின் கரிசனை எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

இந்தியாவின் அழுத்தங்களையும் மீறி அமைச்சரவையின் முடிவு அமைந்திருந்தது. இப்போது மேற்கு முனையத்தை வழங்கப்போவதாக இலங்கை கூறுகின்றபோதிலும், இந்தியத் தரப்பு அதனை எந்தளவுக்கு ஏற்றுக்கொள்ளும் என்பது தெளிவற்ற நிலைதான் உள்ளது.

●

ஈழநாடு





> “நாட்டின் நிலைமையை இராணுவம் எப்படி பார்க்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்” என்று அயே மின் தான்ட் கூறுகிறார். “ஆங்சான் சூகியை ‘அன்னை’ என்று குறிப் பிடுவது சர்வதேச ஊடகத்தின ருக்கு பழகிப் போன விஷயம். ராணுவம் தன்னை ‘தேசத்தின் தந்தை’ என்று கருதிக் கொண்டிருக்கிறது”

# மியன்மாரில் நடந்தது என்ன?






**நா**ட்டின் நிர்வாகப் பொறுப்பை தாங்கள் ஏற்றுக் கொண்டிருப்பதாக மியன்மார் இராணுவம் அறிவித்துள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசிடம் நிர்வாகப் பொறுப்பை ஒப்படைக்க ஒப்புக்கொண்டு ஒரு தசாப்தம் கழித்து இது மீண்டும் நடந் திருக்கிறது.

இந்த ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கை நாட்டில் அச்சத்தை அதிகரிக்கச் செய்துள்ளது. 2011 இல் ஜனநாயக ஆட்சி அமைவதற்கு முன்பு, சுமார் 50 ஆண்டு காலம் இராணுவத்தின் சர்வாதிகார ஆட்சியை சந்தித்த நாடு மியன்மார். அதிகாலை நேரத்தில் ஆங்சான் சூகி மற்றும் பிற அரசியல்தலைவர்கள்கைது செய்யப்பட்ட பாணி, தாங்கள் மறந்துவிட்ட அதே இராணுவ பாணியை நினைவுபடுத்துவதாக அந்த மக்களுக்கு இருந்தது.

கடந்த ஐந்து ஆண்டுகளாக, சூச்சி மற்றும்ஒரு காலத்தில்தடை செய்யப்பட்டிருந்த அவருடைய ஜனநாயகத்துக்கான தேசிய லீக் கட்சி (என்.எல்.டி.) ஆட்சி நடத்தி வந்தது. 25 ஆண்டுகளில்இல்லாத அளவுக்கு சுதந்திரமாக, நேர்மையாக 2015இல் நடந்த தேர்தலில் அந்தக் கட்சி ஆட்சியைப் பிடித்திருந்தது. திங்கள்கிழமை காலையில், அந்தக் கட்சியின் இரண்டாவது பதவிக் காலம் தொடங்கி இருக்க வேண்டும்.

பாராளுமன்றத்தில் கால்வாசி இடங்கள் இராணுவத்தின் வசம் இருக்கும் வகையிலும், மிக முக்கியமான அமைச்சகங்கள் ராணுவத்தின் வசம் இருக்கும் வகையிலும் உருவாக்கப்பட்ட அரசியல் சாசனத்தின் காரணமாக, மியன்மார் நிர்வாகத்தில் இராணுவம் தான் திரைமறைவில் கட்டுப்பாட்டை செலுத்தி வந்தது.

இந்த நிலையில், இப்போது ஏன் ஆட்சிக் கவிழ்ப்பு செய்யப்பட்டது என்ற கேள்வி எழுந்துள்ளது. மிக முக்கியமாக, அடுத்து என்ன நடக்கும் என்ற கேள்வி எழுந்துள்ளது.

### ட்ரம்ப் மாதிரியான மோசடி புகார்கள்

பிபிசியின் தென்கிழக்கு ஆசிய செய்தியாளர் ஜோனாதன் ஹெட், இது குறித்து தெளிவாக விளக்குகிறார். பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடர் திங்கள்கிழமை காலையில் தொடங்கி இருக்க வேண்டும். தேர்தல் முடிவுகளை அங்கீகரிப்பதாக அது அமைந்திருக்கும். இப்போது அது நடக்காது.

கடந்த நவம்பர் மாதம் நடந்த தேர்தலில், பதிவானவற்றில் 80 சதவீத வாக்குகள் என்.எல்.டி. கட்சிக்கு கிடைத்தன. தங்கள் நாட்டின் ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு எதிராக இன அழிப்பு புகார்கள் இருந்தாலும், அந்தக் கட்சிக்கு இவ்வளவு வாக்குகள் கிடைத்தன.

தேர்தல் முடிந்த உடனேயே, தேர்தலில் முறைகேடுகள் நடந்திருப்பதாக இராணுவத்தின் ஆதரவைப் பெற்ற எதிர்க் கட்சி குற்றஞ்சாட்டியது. புதிதாக பதவியேற்ற தற்காலிக தலைவர் கையெழுத்திட்ட அறிக்கையிலும் இந்த குற்றச்சாட்டு கூறப் பட்டிருந்தது. ஓராண்டு கால நெருக்கடி நிலை பிரகடனம் சரியானது என்று நியா யப்படுத்தும் வகையில் இந்த அறிக்கை உள்ளது.

“பல கட்சிகள் பங்கேற்புடன் 2020 நவம்பர் 8 ஆம் திகதி நடந்த பொதுத் தேர்தலில், வாக்காளர் பட்டியலில் பெருமளவு நடந்த முறைகேடுகளை களைய தேர்தல் ஆணையம் தவறிவிட்டது” என்று துணை அதிபராக இருந்த முன்னாள் இராணுவ ஜெனரல் மியின்ட் ஸ்வே கூறியுள்ளார்.

ஆனால் அந்தப் புகாரை நிரூபிக்க சிறிதளவே ஆதாரங்கள் உள்ளன.

“வெளிப்படையாகக் கூறினால், ஆங் சான் சூகி பெரும்பான்மை ஆதரவுடன் வெற்றி பெற்றிருக்கிறார்” என்று ஆசிய மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் துணை இயக்குநர் பில் றொபர்ட்சன் கூறியுள்ளார். “வாக்காளர் பட்டிய லில் மோசடி நடந்திருப்பதாகப் புகார்கள் கூறப்படுகின்றன. இது ட்ரம்ப் புகார்களைப் போல உள்ளது - எந்த ஆதாரங்களும் இல்லாமல் இந்தப் புகார்கள் கூறப்படுகின்றன” என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இருந்தாலும், ஆட்சியை இராணுவம் கைப்பற்றியிருப்பதற்கு “விளக்கம் கண்டுபிடிக்க முடியவில்லை” என்று றொபர்ட்சன் கூறியுள்ளார்.

“வாக்காளர்கள் ஆதரவு கிடைப் பது, ஆட்சியை இழப்பதாக அர்த்தமா? அப்படியில்லை என்பதே இதற்கான பதில்” என்கிறார் அவர்.

### ‘தேசத்தின் தந்தைக்கு’ தர்மசங்கடம் ஏற்படுத்துவது

இராணுவத்தின் ஆதரவைப் பெற்ற யு.எஸ். டி.பி. கட்சிக்கு தேர்தலில் சிறிதளவு மட்டுமே வாக்குகள் கிடைத்திருக்கலாம். ஆனால், இராணுவ ஆட்சியில் 2008ஆம் ஆண்டில் சர்ச்சைக்குரிய வகையில் உருவாக்கப்பட்ட அரசியல் சாசனத்தின்படி, அரசு நிர்வாகத்தில் இராணுவத்துக்கு இன்னமும் பெரிய கட்டுப்பாடு இருக்கிறது.

தானாகவே பாராளுமன்றத்தில் 25 சதவீத இடங்கள் இராணுவத்துக்கு அளிக்க அரசியல்சாசனம் வகை செய்கிறது. அதுமட்டுமின்றி, உள்துறை, இராணுவம்மற்றும்எல்லை விவகாரங்கள் என்ற மூன்று முக்கிய அமைச்சகங்களும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும். எனவே, இந்த அரசியல் சாசனம் அமுலில் உள்ள காலம் வரையில், இராணுவத்துக்கு ஓரளவுக்கு கட்டுப்பாட்டு அதிகாரம் உள்ளது. ஆனால் தனக்குள்ள பெரும்பான்மை பலத்தை பயன்படுத்தி அரசியல் சாசனத்தை என்.எல்.டி. திருத்தியிருக்க முடியுமா?

இராணுவ நடவடிக்கைக்கு எதிராக ஜப் பானில் உள்ள மியன்மார் குடிமக்கள் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

அதற்கு வாய்ப்பில்லை என்று ஜோனாதன் ஹெட் கூறுகிறார். பாராளுமன்றத்தில் 75 சதவீத ஆதரவு இருந்தால் மட்டுமே அது சாத்தியம் - இராணுவத்துக்கு 25 சதவீத இடங்கள் இருப்பதால், அது ஏறத்தாழ சாத்தியமற்றது என்று அவர் தெரிவித்தார்.

இராணுவத்திற்கு ஏற்பட்ட தர்மசங்கடமான சூழ்நிலைதான் இந்த திடீர் நடவடிக்கைக்கு காரணமாக இருந்திருக்கும் என்று முன்னாள் பத்திரிகையாளரும், தொழில்நுணுக்க கல்வியாளருமான அயே மின் தான்ட் தெரிவித்தார்.

யாங்கூனில் இருந்து பிபிசி உடன் பேசிய அவர், “இராணுவம்இந்த அளவுக்குத் தோல்வி அடையும் என அவர்கள் எதிர்பார்க்கவில்லை. இராணுவத்தில் உள்ள வர்களின் குடும்பத்தினரே அவர்களுக்கு எதிராக வாக்களித்திருப்பார்கள்” என்று அவர் கூறினார்.

அதைவிட அதிகமாகவும் நடந்திருக்கும் தான்.

“நாட்டின் நிலைமையை இராணுவம் எப்படி பார்க்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்” என்று அயே மின் தான்ட் கூறுகிறார். “ஆங் சான் சூகியை ‘அன்னை’ என்று குறிப்பிடுவது சர்வதேச ஊடகத்தினருக்கு பழகிப் போன விஷயம். இராணுவம் தன்னை ‘தேசத்தின் தந்தை’ என்று கருதிக் கொண்டிருக்கிறது” என்றும் அவர் கூறினார்.

அதன் விளைவாக, ஆட்சி செய்வது என்ற கேள்வி வரும்போது, “கடமை மற்றும் உரிமை” என்ற உணர்வாக இராணுவம் பார்க்கிறது. சர்வதேச வர்த்தகத்தில் மியான்மர் திறந்த நிலையுடன் அணுகுவது இராணுவத்திற்குப் பிடித்திருக்காது.

“வெளியில் இருந்து வருபவர்களை ஆபத்தானவர்கள் என்ற ரீதியில் இராணுவம் பார்க்கிறது” என்று அயே மின் தான்ட் கூறுகிறார்.

பெருந்தொற்று மற்றும் ரோஹிங்யா மக்களுக்கு வாக்குரிமை மறுப்பு குறித்த சர்வதேச அளவிலான கவலை ஆகியவை காரணமாக, இராணுவம் இப்போது செயல்பட தைரியம்கிடைத்திருக்கும்என்று அவர் குறிப்பிடுகிறார். இவையெல்லாம் இருந் தாலும் இதை ஆச்சர்யத்துடன் தான் பார்க்க வேண்டியுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

### எதிர்காலம் எப்படியானதாக இருக்கும்?

இராணுவத்திற்கு சிறிதளவே ஆதாயம் கிடைக்கும் என்ற நிலையில், இராணுவம் இப்போது ஏன் இந்த நடவடிக்கையை எடுத்தது என்று பல நிபுணர்கள் கூறுகின்றனர்.

“இப்போதுள்ள அமைப்பு முறை இராணுவத்துக்குப் பெருமளவு பயன் தருவதாக இருக்கும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். தன்னாட்சி விஷயத்தில் இராணுவத்தின் முழு கட்டுப்பாடு இருக்கிறது. வணிக நலன்களில் சர்வதேச முதலீடுகளில் கணிசமான கட்டுப்பாடு வைத்துள்ளது. போர்க் குற்றங்களில் மக்கள் நிர்வாகத் திடம் இருந்து பாதுகாப்பு பெறுவதற்கான அம்சங்கள் உள்ளன” என்று சிங்கப்பூரில் உள்ள ஆசிய ஆராய்ச்சி நிலையத்தின் தேசிய பல்கலைக்கழகத்தில் ஆய்வு மேற்கொண்டிருக்கும் ஜெரார்ட் மெக்கர்த்தி பிபிசியிடம் கூறினார்.

“இப்போது அறிவித்துள்ளபடி, ஓராண்டு காலத்துக்கு அதிகாரத்தைப் பறித்துக் கொள்வதால், சீனா அல்லாத சர்வதேச பங்காளர்கள், இராணுவத்தின் வணிக நலன்களுக்கு ஊறு ஏற்படுத்தி, சூகி மற்றும் என்.எல்.டி. கட்சியை இன்னொரு பதவிக் காலத்துக்கு ஆட்சி செய்ய தேர்ந்தெடுத்த பல மில்லியன் மக்களின் எதிர்ப்பை அதிகரிக்கச் செய்வதாக இருக்கும்” என்கிறார் அவர்.

எதிர்காலத்தில் வரக் கூடிய தேர்தல்களில் யு.எஸ்.டி.பி. கட்சிக்கு அதிக ஆதரவு கிடைக்கும் வாய்ப்பை ஏற்படுத்த முடியும் என்று அவர்கள் நம்புவதாக இருக்கலாம். ஆனால் அதுபோன்ற எதிர்பார்ப்புகள் “குறிப்பிடத்தக்கதாக” இருக்குமா என அவர் சந்தேகம் தெரிவித்தார்.

இப்போதைய நடவடிக்கையால் சர்வதேச அளவில் “தனிமைப்படுத்தப்பட்ட நாடாக” மியான்மர் மாறும் ஆபத்து மீண்டும் ஏற்பட்டுள்ளது, தாயகத்தில் மக்களின் கோபத்தையும் இராணுவம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று பில் ராபர்ட்சன் கூறியுள்ளார்.

“மியன்மார் மக்கள் இதை மௌனமாக ஏற்றுக் கொள்வார்கள் என எனக்குத் தோன்றவில்லை. மீண்டும் இராணுவ ஆட்சிக்குச் செல்வதை அவர்கள் விரும்பவில்லை. இராணுவத்தின் பலத்தில் இருந்து தங்களைக் காப்பாற்றும் அரணாக சூச்சியை மக்கள் பார்க்கிறார்கள்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

பேச்சுவார்த்தைகள் மூலம் இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு இன்னமும் நம்பிக்கை இருக்கிறது என்று அவர் தெரிவித்தார். ஆனால், “பெரிய போராட்டங்கள் தொடங்கினால், பெரிய நெருக்கடிகளும் ஏற்படும்” என்றும் அவர் கூறினார். ■

# ஜெனிவாவிலும் உள்நாட்டிலும் இலங்கைக்கு எதிராக சூழ்ச்சி

## ஜனாதிபதிக்கு குணதாஸ கடிதம்



கொழும்பு,பெப்.03

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடரில் இலங்கையை பெரும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் சர்வதேச மற்றும் உள்ளக மட்டத்தில் சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. மனித உரிமை ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கையின் உள்ளடக்கத்தை அரசாங்கம் நிபந்தனைகளற்ற வகையில் நிராகரிக்க வேண்டும்.**

ஒரு நாட்டின் உள்ளக விடயங்களில் தலையிடும் உரிமை, மனித உரிமை பேரவைக்குக் கிடையாது. ஆகவே உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட உபாயங்களை கொண்டு இம்முறை தீர்வு காண்பது அவசியமாகும் எனச் சுட்டிக்காட்டி தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாஸ அமரசேகர, ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

அந்நக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

மனித உரிமைகள் ஆணையாளரால் வெளியிடப்பட்ட அறிக்கையை ஏற்கமுடியாது என்று மறுப்புத் தெரிவிப்பதால் மாத்திரம் சர்வதேச அரங்கில் ஏற்பட்டுள்ள சவால்களை வெற்றி கொள்ள முடியாது. பிரித்தானிய அரசாங்கத்தின் தலைமையின் கீழ் செயல்படும் நாடுகள் இலங்கைக்கு எதிராகப் புதிய பிரேரணையை கொண்டு வர தீர்மானித்துள்ளதாக அறிய முடிகிறது.

2015 ஆம் ஆண்டும் இவ்வாறான தன்மையே காணப்பட்டது. 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இடம்பெற்ற கூட்டத்தொடரில் நல்லாட்சி அரசாங்கம் இணை அனுசரணை வழங்குவதாக இணக்கம் தெரிவித்த 30 -1 பிரேரணையிலிருந்து விலகியமை ஏற்றுக் கொள்ள கூடியது. 30-1 பிரேரணையில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை செயல்படுத்தும் வகையில் இம்முறை புதிய பிரேரணை மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்படும் என்பதை உணர முடிகிறது.

அரசாங்கத்தை சர்வதேச அரங்கில் நெருக்கடிக்குள்ளாக்க சர்வதேச மட்டத்திலும், உள்ளக மட்டத்திலும் சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஒரு நாட்டின் உள்ளக விவகாரங்களில் தலையிடும் உரிமை, மனித உரிமைகள் பேரவைக்குக் கிடையாது.

ஆரம்ப காலத்தில் இருந்து நாமும் இவ்விடயத்தில் சற்று இறுக்கமாகச் செயல்பட்டிருக்க வேண்டும். ஆகவே இம்முறை இடம்பெறவுள்ள 46 ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக சர்வதேச நாடுகள் முன்வைக்கும் பிரேரணைகளை அரசாங்கம் நிபந்தனையற்ற வகையில் இரத்துச் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

# அமைச்சர் விமல் வீரவன்சவின் செயல்பாடு கவலைக்குரியது

## அரசாங்கம் அடிபணியாது என்கிறார் சாகர காரியவசம்

கொழும்பு,பெப்.03

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் கூட்டணியமைத்துள்ள பங்காளிக் கட்சிகள் கூட்டுப்பொறுப்புடன் செயல்பட வேண்டும்.

அமைச்சர் விமல் வீரவன்சவின் செயல்பாடு கவலைக்குரியது. சமூகத்தின் மத்தியில் வீரன்போல கருத்துரைப்பவர்களின் அச்சுறுத்தலுக்கு அரசாங்கம் ஒருபோதும் அடிபணியாது என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

2020ஆம் ஆண்டு பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்த அரசாங்கத்தையே பொறுப்பேற்றோம். கொரோனா வைரஸ் தாக்கம் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மேலும் பலவீனப்படுத்தியது. சிறந்த திட்டமிடலுக்கு அமைய பொருளாதாரம் முகாமைத்துவம் செய்யப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும், தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் அரசாங்கம் கடந்த வருடத்திலிருந்து பெருமளவு நிதியைச் செலவிட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவை காணப்பட்டது. கிழக்கு முனையத்தின் 49 சதவீத உரிமத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்குவது தொடர்பில் தீர்மானம் ஏதும் எடுக்கவில்லை. யோசனை மாத்திரமே முன்வைக்கப்பட்டது. இவ்விடயத்தை கொண்டு எதிர்த்தரப்பினர் அரசியல் பிரசாரங்களை அரசாங்கத்துக்கு எதிராக முன்னெடுத்தார்கள். ஆளும் தரப்பின் உறுப்பினர்களும் அதற்கு சார்பாகவே செயல்பட்டார்கள்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பில் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் அமைச்சர் விமல் வீரவன்ச 10 கட்சிகளை ஒன்றிணைத்து செயல்பட்ட விதம் மற்றும் ஊடகங்களுக்கு குறிப்பிட்ட செய்தி முற்றிலும் தவறானது. பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் கூட்டணி அமைத்துள்ளவர்கள் கூட்டுப் பொறுப்புடன் செயல்பட வேண்டும்.

அரசாங்கத்துக்குள் பேச வேண்டிய விடயத்தை சமூகத்தின் மத்தியில் செயல் வீரன் போல் பேசுவதால் எவ்வித பயனும் ஏற்படாது. எவரின் அச்சுறுத்தலுக்கும், அழுத்தங்களுக்கும் ஜனாதிபதி அடிபணிய மாட்டார். கருத்துச் சுதந்திரம் காணப்படுகிறது என்பதற்காக கட்சியின் கொள்கைக்குப் புறம்பாகச் செயல்பட முடியாது. ஆகவே அமைச்சர் விமல் வீரவன்ச செயல்பட்ட விதம் கவலைக்குரியது- என்றார். (எ)

# ஜே.ஆர்.ஜெயவர்த்தன சாயலில் பழிவாங்கும் கோட்டாபய அரசு

## கடுமையாக சாடினார் ரில்வின் சில்வா

கொழும்பு,பெப்.03

இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன செய்தவற்றையே தற்போதுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் செய்கின்றார்.

1978 இல் நீதிமன்ற அதிகாரங்களையுடைய ஜனாதிபதி ஆணைக்குழுவை அமைத்து ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா உள்ளிட்டோரது குடியுரிமையை நீக்கி தனக்கு எதிரானவர்களை ஜே.ஆர்.ஜெயவர்த்தன பழிவாங்கியதைப் போன்று தற்போது கோட்டாபய ராஜபக்ஷவும் அவருக்கெதிரானவர்களை பழிவாங்கலுக்குட் படுத்துகின்றார் என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணி தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

ராஜபக்ஷக்களையும் அவர்களுக்கு நெருக்கமானவர்களையும் 79 வழக்குகளிலிருந்து விடுவிக்குமாறும் வழக்குத் தாக்கல் செய்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறும் அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

இது வழமையான விசாரணை ஆணைக்குழுக்களுக்கும் அப்பால் தண்டனை வழங்கும்



ஆணைக்குழுவாகச் செயல்பட்டுள்ளது. இது அபாயமுடையதாகும். விசாரணை ஆணைக்குழு தண்டனை வழங்க முடியாது.

எனவே ஆணைக்குழு மூலம் வழக்குகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளவர்கள் குற்றமற்றவர்கள் என்றால் நீதிமன்றத்தில் அதனை நிரூபிக்குமாறு சவால் விடுகின்றோம்.

வழக்குகளிலிருந்து விடுவிப்பது மாத்திரமின்றி வழக்குத் தொடர்ந்தவர்களை பழிவாங்குவதும் இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டதன் இலக்காகும். எனவே ஜனாதிபதி கோட்டாபய நியமித்த ஆணைக்குழுவை 'அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஆணைக்குழு' என்று கூறுவதைவிட 'அரசியல் பழிவாங்கல் ஆணைக்குழு'என்று கூறுவதே பொருத்தமானதாகும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஆட்சிக்கு வந்ததன் பின்னர் அதிகாரங்களை அதிகரித்துக் கொள்வதற்காக சிலருக்கு இலஞ்சம் வழங்கி 20 ஆவது அரசமைப்பு திருத்தத்தை நிறைவேற்றிக் கொண்டமை மற்றும் தனது குடும்பத்தாரை வழக்குகளிலிருந்து விடுவித்ததைத் தவிர மக்களுக்காக எதனையுமே செய்யவில்லை- என்றார். (எ)

# உயர் நீதிமன்றத்தில் ரஞ்சன் எம்.பி. மனு

கொழும்பு,பெப்.03

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை மறுஆய்வு செய்யுமாறு கோரியே அவர் உயர் நீதிமன்றில் தனது சட்டத்தரணி மூலம் இவ்வாறு மனுத் தாக்கல் செய்துள்ளார்.

கடந்த 2017 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி அலரிமாளிகைக்கு அருகில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தபோது, நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் ஊழல் வாதிகள் என வெளியிட்ட கருத்துகள் மூலம் நீதிமன்ற அவமதிப்பில் ஈடுபட்டார் என ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டு சந்தேகத்துக்கு இடமின்றி வழக்குத் தொடுநர் சட்ட மா அதிபர் தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதால் குற்றவாளியாக பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை அறிவித்து, அவருக்கு நான்கு வருட கடூழியச் சிறைத்தண்டனையை உயர் நீதிமன்ற நீதியரசர்கள் பிறப்பித்தனர். இந்நிலையிலேயே அவர் உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளார். (எ)

# அரசு வாக்குறுதிகளை மீறுவது மக்களுக்கு செய்யும் துரோகம்

## திஸ்ஸ விதாரண சுட்டிக்காட்டு

கொழும்பு,பெப்.03

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை வெளி நாட்டவர்களுக்கு விற்பதற்கோ, குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கோ ஒருபோதும் இடமளிக்க முடியாது. தேசிய வளங்களைப் பாதுகாப்போம் என கூட்டணியமைத்து நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளோம். வாக்குறுதிகளை மீறுவது மக்களுக்கு செய்யும் துரோகமாகும் என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் லங்கா சமசமாஜ கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன ஒன்றிணைந்து எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டன. இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை வியாபார நடவடிக்கைகளுக்காகக் கூட பிற நாட்டு நிறுவனத்துக்கு வழங்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

தேசிய வளத்தின் ஊடாக நாட்டு மக்கள் மாத்திரம் பயன்பெற வேண்டும் என்பதற்காகவே கடுமையான எதிர்ப்பை வெளியிடுகின்றோம். கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை முழுமையான அபிவிருத்தி செய்யும் பொறுப்பைத் துறைமுக அதிகார சபை ஏற்க வேண்டும். அதற்கான வளங்கள் தேசிய மட்டத்தில் காணப்படுகின்றன.

1320 மீற்றர் நீளமான கிழக்கு முனையத்தில் 420 மீற்றர் நீளத்தை தேசிய பொறியியலாளர்கள் அபிவிருத்தி செய்துள்ளார்கள். ஆகவே மிகுதி பரப்பை அபிவிருத்தி செய்யும் பொறுப்பை பிற நாட்டுக்கு வழங்க வேண்டிய தேவை கிடையாது.

இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு முனையத்தை வழங்குவதாக கூறப்பட்டுள்ளது. தொழிலாளர் வர்க்கத்தின் மத்தியிலும், முதலாளிமார் வர்க்கத்திலும் இந்நிறுவனம் தொடர்பில் சாதகமான அபிப்ராயம் கிடையாது. - என்றார். (எ)

# கல்வித்துறைக்கு கொரோனா இனி தடையாக அமையாது

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



கொழும்பு,பெப்.03

**கொரோனா வைரஸ் தாக்கம் இனி கல்வித்துறைக்கு ஒரு தடையாக அமையாது என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

சிறந்த திட்டமிடலுக்கு அமைய முதலாம் தவணை கற்றல் நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களின் கற்றல் நடவடிக்கைகள் வழமை நிலைக்குத் திரும்பியுள்ளன.

மேல் மாகாணத்தில் களுத்துறை, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில் அனைத்து தரங்களுக்குமான கற்றல் நடவடிக்கைகளை எதிர்வரும் 15ஆம் திகதி முதல் ஆரம்பிக்க முடியும் என பிரதேச தொடர்பு குழுவினர் யோசனை முன்வைத்துள்ளனர்.

களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டம் தொடர்பில் பிரதேச தொடர்பு குழுவினர் முன்வைத்துள்ள யோசனைகளை சுகாதார பணிப்பாளர் நாயகத்திடம் தெரிவித்துள்ளோம்.

பாடசாலைகளை எதிர்வரும் 15ஆம் திகதி திறக்க சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தின் பணிப்பாளர் அனுமதி வழங்குவார் என எதிர்பார்க்கின்றோம்.

ஆசிரியர்களுக்கும், பாடசாலை வெளிக்கள சேவையாளர்களுக்கும் கொரோனா தடுப்பூசியை வழங்குமாறு ஜனாதிபதி செயலணியின் தலைவர் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் லலித் வீரதுங்க விடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இம்மாதத்தின் நடுப்பகுதியில் பாடசாலை சேவையாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தடுப்பூசிகளை வழங்க எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் கல்வித்துறைக்கு ஏற்படுத்திய சவால்களை சிறந்த முறையில் வெற்றி கொண்டுள்ளோம்.

கொரோனா தாக்கம் இனி கல்வித்துறைக்கு ஒரு தடையாக அமையாது. அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு கடந்த காலங்களில் ஆசிரிய சங்கம், சிவில் அமைப்புக்கள் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் தற்போது பொய்யாக்கப்பட்டுள்ளன.

திட்டமிட்டப்படி 2020ஆம் ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் மார்ச் மாதம் நடத்தப்படும். இடம்பெற்று முடிந்த உயர்தர பரீட்சைக்கான பெறுபேறுகள் ஏப்ரல் மாதம் இரண்டாம் வாரத்தில் வெளியிடப்படும்.

சாதாரண தரப் பரீட்சைக்கான பெறுபேற்றை ஜூன் மாதம் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். (எ)

# சுகாதார ஆலோசனைக்கமைய சுதந்திர தின கொண்டாட்டம்

## கம்பீரம் குறையாது என்கிறார் சமல்



கொழும்பு,பெப்.03

இலங்கையின் 73 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் ஏனைய வருடங்களைப் போலவே இம்முறையும் இடம்பெறும்.

எனினும் இந்த ஆண்டு கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தலால் பல சுற்றுப் பேச்சுக்களின் பின்னர் சுகாதார ஆலோசனை வழிகாட்டல்களுக்கு அமைய பாதுகாப்பான முறையில் கம்பீரம் குறையாத வாறு கொண்டாட்டங்கள் நடைபெறும் என்று அரச பாதுகாப்பு மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

73 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் இணைய வழியூடாக நடைபெற்றது. இதன் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் வழமை போன்று அதன் கம்பீரம் குறையாமல் நடைபெறும். எனினும் இம்முறை கொரோனா அச்சுறுத்தல் காணப்படுவதால் சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளுக்கமைய மட்டுப்பாடுகளுடன் அவை இடம்பெறும்.

இன்று முதல் மத வழிபாடுகள் ஆரம்பமாகும். முதலாவது வழிபாடு சுதந்திர சதுக்கத்தில் இடம்பெறும். அத்தோடு வழமையைப் போன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வருகையை அடுத்து முப்படையினரின் மரியாதை அணிவகுப்பு மற்றும் கலாசார பேரணி என்பனவும் நடைபெறும்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு சகல மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்தில் மர நடுகை செயல்பாடுகளை முன்னெடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி 1 முதல் 7 வரை சகல அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், வீடுகள் உள்ளிட்டவற்றில் தேசிய கொடியை பறக்கவிடுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது என்றார்.

# வெறுப்புணர்வு தூண்டியவர் இணையவழி தொடர்பாடல்

## சி.ஐ.டியினர் அதிர்ச்சித் தகவல்

கொழும்பு,பெப்.03

இனங்களுக்கிடையே குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கில் வெறுப்புணர்வைத் தூண்டும் கருத்துக்களை முகப்புத்தகம் மூலம் வெளியிட்டதாகக் கூறி கைது செய்யப்பட்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைத்து விசாரிக்கப்பட்டு வரும் தெஹிவளையைச் சேர்ந்த பஸால் மொஹம்மட் நிசார் விவகாரத்தில் பல்வேறு அதிர்ச்சித் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த சந்தேக நபரின் கையடக்கத் தொலைபேசி மற்றும் மடிக் கணனி ஆகியவற்றைப் பகுப்பாய்வு செய்த போது, சந்தேக நபர் சட்ட விரோதமாக, மிக இரகசியமான முறையில் இணையவழி தொடர்பாடல் கட்டமைப்பொன்றை நிறுவி அதனை முன்னெடுத்துச் சென்றுள்ளமை தொடர்பில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன என சி.ஐ.டியினர் நேற்று கொழும்பு பிரதான நீதிவான் மொஹம்மட் மிஹாலுக்கு அறிவித்துள்ளனர்.

இந்தத் தொடர்பாடல் கட்டமைப்பு மூலம் இலங்கையின் எந்தவொரு தொலைபேசி சேவைக்கும் தொடர்புகளை ஏற்படுத்த முடியும் என்பதும், அவ்வாறு ஏற்படுத்தப்படும் அழைப்புக்கள் தொலைபேசி விபரப் பட்டியலில் பதிவாகாது என்பதும் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக விஷேட அறிக்கை மூலம் சி.ஐ.டி. நீதிவானுக்கு அறிவித்துள்ளது.

சுமார் 450 இற்கும் அதிகமான பயனாளர்களை கொண்டுள்ள இக்கட்டமைப்பில், முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலரும் உள்ளமை தொடர்பில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெறுவதாக தெரிவித்த சி.ஐ.டியினர், இந்த தொலைபேசி கட்டமைப்பு உயிர்த்த ஞாயிறு தினக்குண்டுத் தாக்குதல்களுடன் தொடர்புபட்டவர்களாலும் பயன்படுத்தப்பட்டதா? என்று விரிவான விசாரணை இடம்பெறுகிறது என நீதிவானுக்குக் கூறினர்.

பசால் மொஹம்மட் நிசார் எனும் சி.ஐ.டி. பொறுப்பில் உள்ள சந்தேகநபர் தொடர்பில், 2007 ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பிலான சர்வதேச இணக்கப்பாட்டு சட்டத்தின் 3 (1) ஆம் உறுப்புரைக்கு அமையவும், தண்டனை சட்டக் கோவையின் 120 ஆம் அத்தியாயத்தின் கீழும், 20017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க கணினி குற்றங்கள் தொடர்பிலான சட்டத்தின் 6 (1) ஆம் அத்தியாயத்தின் கீழும் 1978 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாத தடை சட்டத்தின் கீழும் விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. (எ)

# 14 பேர் கைது

கொழும்பு,பெப்.03

தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிச் செயல்பட்ட குற்றச்சாட்டில் நேற்றுக் காலை 9 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலத்தில் 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

முகக்கவசம் அணிதல் மற்றும் சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல் போன்ற விதிமுறைகளை மீறிச் செயல்பட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய கடந்த ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி முதல் மூன்று மாத காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிச் செயல்பட்ட குற்றச்சாட்டில் இரண்டாயிரத்து 944 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்- என்றார். (எ)

# 8088 பேர் தனிமைப்படுத்தல்

கொழும்பு, பெப். 03

இராணுவத்தினரால் நடத்தப்படும் 94 தனிமைப்படுத்தல் நிலையங்களில் மேலும் 8088 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணி நேரத்தில், 916 பேர் முழுமையாகக் குணமடைந்து வைத்தியசாலை மற்றும் சிகிச்சை நிலையங்களை விட்டு வெளியேறியுள்ளனர்.

கொரோனா தொற்றாளர்கள் என அடையாளம் காணப்பட்ட 6 ஆயிரத்து 585 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# தனித் தமிழீழம் அமைத்திட பொது வாக்கெடுப்பு நடத்துக

## உலக தலைவர்களிடம் வைகோ கோரிக்கை

சென்னை,பெப்.03

தனித் தமிழீழம் அமைத்திட பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என உலகத் தலைவர்களுக்கு ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வை.கோபாலசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இது தொடர்பில் அவர், நூற்றுக்கும் மேற்பட்ட மின்னஞ்சல் கடிதங்களை அனுப்பியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சன், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, அவுஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மொரிசன் உள்ளிட்ட உலக நாடுகளின் தலைவர்கள், ஐ.நா. மன்றப் பொதுச்செயலாளர், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத் தலைவர், ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றத் தலைவர், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் உள்ளிட்ட பல நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மனித உரிமைகள் பாதுகாப்பு அமைப்புக்களுக்கு அவர் இவ்வாறு கடிதங்களை அனுப்பியுள்ளார்.

அதில், ஈழத்தமிழர்களின் தன்னாட்சி உரிமையை ஏற்க வேண்டும், ஐ.நா. மன்றத்தின் மேற்பார்வையில் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும். 2015 பெப்ரவரி 10ஆம் திகதி இலங்கை வடக்கு மாகாண சபை நிறைவேற்றிய தீர்மானத்தை ஏற்க வேண்டும்.

இலங்கை அரசு நடத்துகின்ற எந்த விசாரணையின் மீதும் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை இல்லை. எனவே பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றம் விசாரணை மேற்கொள்ள வேண்டும்.

இந்திய அரசு, மனித உரிமைகள் மன்ற உறுப்பு நாடுகளை ஒருங்கிணைத்து நிகழ்ச்சி நிரல் 4இன்படி சிறப்பு ஆணையர் ஒருவரைத் தெரிவு செய்து, இலங்கையில் நடைபெறுகின்ற மனித உரிமை மீறல்கள், தமிழர்களுக்கு எதிராக ஒடுக்குமுறைகளைக் கண்காணிப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.

இலங்கையில் நடைபெறுகின்ற மனித உரிமை மீறல்களைக் கண்காணித்து, உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

தொடர்புடைய உறுப்பினர்களுடன் இலங்கைக்கு நேரில் சென்று ஆய்வு செய்ய வேண்டும்.

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாநிலங்களில் மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ.நா. பொதுப்பேரவைக்கும் மனித உரிமைகள் மன்றத்திற்கும் ஆய்வு அறிக்கை வழங்க வேண்டும். பிரச்னைகளை உடனுக்குடன் வெளிக்கொணர வேண்டும். அதிகாரபூர்வ செய்தி அறிக்கைகளை வெளியிட வேண்டும்.

இலங்கைச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழர்களை விடுவித்து நீதி வழங்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (எ)

# அவுஸ்திரேலியாவில் மீண்டும் காட்டு தீ!

## 7,000 ஹெக்ரெயர் நாசம் 30 வீடுகள் சாம்பராகின!

சிட்னி, பெப். 03

அவுஸ்திரேலியாவில் பரவி வரும் காட்டுத் தீயால் 7 ஆயிரம் ஹெக்ரெயர் காடுகள் நாசமாகின. அத்துடன் 30இற்கும் மேற்பட்ட வீடுகள் எரிந்து சாம்பராகின.

அவுஸ்திரேலியாவின் சுவான் நகரம் மற்றும் முன்டரிங், சிட்டரிங், நோர்டாம் ஆகிய பகுதிகளில் காட்டுத் தீ ஏற்பட்டது. கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு தீ வேகமாக பரவி வருகிறது.

இதனால் அந்தப் பகுதிகளில் வசிப்பவர்கள் அப்பகுகளிலிருந்து வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தீயை அணைக்க 250இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் போராடி வருகிறார்கள். ஆனால், தீயை அணைக்க முடியவில்லை.

இதனிடையே இந்தக் காட்டுத் தீயால் 30இற்கும் மேற்பட்ட வீடுகள் எரிந்து நாசமாகின.

சுமார் 7 ஆயிரம் ஹெக்ரெயர் காட்டுப்பகுதி தீயில் எரிந்துள்ளன.



தீ வேகமாக பரவுதால் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

முன்னதாக 2019 ஜூனில் தொடங்கிய காட்டுத் தீ 2020 மே வரை நீடித்தது. இதில் ஒரு கோடியே 86 இலட்சத்து 36 ஆயிரத்து 79 ஹெக்ரெயர் காடுகள் தீயில் எரிந்து நாசமாகின. தீயில் சிக்கி 34 பேரும், தீ ஏற்படுத்திய புறக்காரணிகளால் 445 பேரும் உயிரிழந்தனர். பல இலட்சக் கணக்கான வன உயிரிகள் உயிரிழந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# புதிய திரிபு வைரஸ்கள் 131 நாடுகளில் பரவல்!

ஜெனிவா, பெப். 03

இங்கிலாந்து, தென்னாபிரிக்கா மற்றும் பிரேசிலில் அடையாளம் காணப்பட்ட வேகமாகப் பரவும் புதிய திரிபு கொரோனா வைரஸ் 131 நாடுகளில் பரவியுள்ளதாக உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

இங்கிலாந்தில் கண்டறியப்பட்ட உருமாறிய கொரோனா வைரஸ் 82 நாடுகளில் பரவியுள்ள அதேவேளை, தென்னாபிரிக்காவில் அடையாளம் காணப்பட்ட புதிய திரிபு வரைஸ் 40 நாடுகளில் பரவியுள்ளதாக உலக சுகாதார அமைப்பின் சுகாதார அவசர நிலை திட்டத்திற்கான தொழில் நுட்ப தலைவர் மரியா வான் கெர்கோவ் எச்சரித்துள்ளார்.

அத்துடன், பிரேஸிலில் பரவிவரும் திரிபு கொரோனா வைரஸ், 9 நாடுகளில் பரவியுள்ளதாகவும் மரியா வான் கெர்கோவ் தெரிவித்தார்.

இங்கிலாந்தில் கடந்த 2020ஆம் ஆண்டு டிசெம்பரில் உருமாறிய புதிய வகை கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டது. இதையடுத்து அந்த நாட்டுக்கு பல நாடுகளும் பயணத் தடை விதித்தன. இதேபோன்ற தடை தென்னாபிரிக்காவுக்கும் விதிக்கப்பட்டது.

புதிய திரிபு கொரோனா வைரஸ் தற்போது பாவனையில் உள்ள தடுப்பூசிகளுக்கு எதிராகச் செயலாற்றுமா? என்ற சந்தேகங்களும் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வைரஸ் தொற்று பரிசோதனை: போலி அறிக்கைகள் புழக்கத்தில்!

பாரிஸ், பெப். 03

வைரஸ் தொற்று இல்லை என்பதை உறுதிப்படுத்தும் போலியான சோதனை ஆவணங்கள் புழக்கத்துக்கு வந்துள்ளன என்று ஐரோப்பிய பொலிஸ் சேவையான 'யூரோபொல்' (Europol) எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஐரோப்பிய நாடுகளுக்கு இடையே எல்லை தாண்டிய பயணங்களின் போது பி.சி.ஆர். என்ற வைரஸ் சோதனை அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதை பல நாடுகள் கட்டாயமாக்கி உள்ளன.

இதனை அடுத்தே போலியான வைரஸ் சோதனை ஆவணங்களை (negative Covid-19 tests) இரகசியமாக விற்பனை செய்கின்ற முயற்சிகள் இடம்பெற்று வருவதாக 'யூரோபொல்' அறிவித்துள்ளது.

இங்கிலாந்திலும் பிரான்ஸிலும் போலி பரிசோதனை ஆவணங்களை விமானப் பயணிகளுக்கு தபால் மற்றும் இணைய வழிகளில் விற்பனை செய்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் சிலர் கைது செய்யப் பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

உயர்ந்த தரம் வாய்ந்த வைரஸ் பரிசோதனை அறிக்கைகளை ஒத்த வடிவங்களில் போலி ஆவணங்களைத் தயாரிப்பதற்கு தற்போதைய அச்சு மற்றும் இலத்திரனியல் நுட்பங்களைப் பயன்படுத்த முடியும் என்பதால் எதிர்காலத்தில் இது ஒரு பெரும் குற்றச் செயலாகப் பரவுவதற்கு வாய்ப்புள்ளது - என்று நெதர்லாந்தின் ஹேக் நகரைத் தளமாகக் கொண்ட 'யூரோபொல்' பொலிஸ் சேவையினர் எச்சரித்துள்ளனர்.

பாரிஸ் விமான நிலையத்தில் பிரபல பரிசோதனைக் கூடம் ஒன்றின்பெயரில் போலியான வைரஸ் பரிசோதனை அறிக்கைகளைப் பயணிகளுக்கு விற்பனை செய்தவர்கள் எனக் கூறப்படும் ஏழு பேரை பொலிஸார் கடந்த நவம்பரில் கைது செய்திருந்தனர். போலி மருத்துவ அறிக்கை ஒன்றிற்கு 150 முதல் 300 யூரோக்கள் வரை அறவிடப்படுவது தெரியவந்துள்ளது. அவசரமாக விமானப் பயணங்களில் ஈடுபடவேண்டிய கட்டாயம் உள்ள பயணிகள் சட்டவிரோத முகவர்களிடம் இவ்வாறு போலி ஆவணங்களை வாங்கி ஏமாறும் நிலைமையும் காணப்படுகிறது. (ஐ)



# மியன்மாரில் இராணுவ ஆட்சி அமெரிக்கா கடும் எச்சரிக்கை

வாஷிங்டன், பெப். 03

இராணுவ ஆட்சி தொடர்ந்தால் மியன்மார் மீது அமெரிக்கா மீண்டும் பொருளாதார தடைகளை விதிக்க நேரிடும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மியன்மாரின் இராணுவம் அந்த நாட்டின் ஆட்சியை நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளது. இதையடுத்து, அந்த நாட்டின் தலைவர் ஆங் சான் சூகி கைது செய்யப்பட்டார். மியன்மார் இராணுவத்தின் இந்த நடவடிக்கைக்கு உலக நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் மியன்மாரில் இராணுவம் ஆட்சியை கைப்பற்றியமை குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கருத்து வெளியிடுகையில்,

'மியன்மார் இராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றுவது நாட்டின் ஜனநாயகத்தின் மீதான நேரடித் தாக்குதலாகும். நாட்டின் ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி மீதான நேரடித் தாக்குதல் இதுவாகும். மேலும், ஜனநாயக அரசாங்கத்திற்கு அமைதியான மாற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கையின் மத்தியில் பொருளாதார தடைகளை நடைமுறைப்படுத்துவதற்கான 2016 ஆம் ஆண்டு முடிவு உடனடியாக மதிப்பாய்வு செய்யப்படும். இராணுவ ஆட்சி தொடர்ந்தால் மியன்மாரில் மீண்டும் பொருளாதார தடைகளை விதிக்க நேரிடலாம்", என்று அவர் எச்சரித்தார். (ஐ)

மீண்டும் சர்ச்சையில் அமெரிக்க பொலிஸ்

# கறுப்பின சிறுமி மீது மோசமான தாக்குதல்!

நியூயோர்க், பெப். 03

அமெரிக்காவில் கறுப்பின சிறுமியின் முகத்தில் அதிக எரிவை ஏற்படுத்தும் பெப்பர் ஸ்பிறேயை பொலிஸார் அடித்தமை பெரும் அதிர்வலையையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க அரசியலில் கறுப்பின மக்களின் உரிமைகள், சமத்துவம், சம வாய்ப்புகள் பற்றிய பிரச்னைகள் பல ஆண்டுகளாக முக்கிய பங்கு வகிக்கிறது. அமெரிக்காவின் வெள்ளையின பொலிஸார் இனப்பாகுபாடு காட்டுகின்றனர் என்றும், கறுப்பின குற்றவாளிகள் மீது மிகக் கடுமையாக நடக்கின்றனர் என்றும் நீண்டகாலமாக குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

இந்நிலையில், ரோச்சஸ்டர் மாகாணத்தைச் சேர்ந்த மனநலம் பாதிக்கப்பட்ட 9 வயது சிறுமியை பொலிஸார் தங்களின் காருக்குள் ஏற்ற முயன்றனர். அவர்களை சிறுமி கடுமையாக எதிர்த்துள்ளார். இதனால், சிறுமியின் முகத்தில் அதிக எரிவையும் வலியையும் ஏற்படுத்தும் பெப்பர் ஸ்பிறேயை அடித்தனர்.

இந்த விடயம் தற்போது பெரும் அதிர்வலைகளை அந்நாட்டில் ஏற்படுத்தியுள்ளது.

ஆனால், மனநலம் பாதிக்கப்பட்ட சிறுமி தங்களை தாக்கியதால் அவரை பத்திரமாக அழைத்துச்செல்ல பெப்பர் ஸ்பிரே பயன்படுததப்பட்டது. கறுப்பின சிறுமி என்று பாகுபாடு காட்டவில்லை என்று அந்தச் சிறுமியை கைது செய்த அன்ட்ரூ அண்டர்சன் தெரிவித்துள்ளார். (ஐ)



ஈழநாடு





# சிமோனா அசத்தல் வெற்றி!

மெல்பர்ன், பெப். 03

கிப்ஸ்லண்ட் தெரபி ரென்னிஸ் போட்டியில் அடுத்த சுற்றுக்கு சிமோனா ஹாலேப் முன்னேறியுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் மெல்பர்னில் இந்தத் தொடர் ஆரம்பமானது. இதில் நேற்று அதிகாலை இடம்பெற்ற போட்டியில், உலகின் இரண்டாம் நிலை வீராங்கனையான சிமோனா ஹாலேப் இளம் வீராங்கனையான அனஸ்ராஷியா பொரபோவாவை எதிர்கொண்டார்.

முதல் சுற்றை 6 - 4 என்ற செற் கணக்கில் இலகுவாக வெற்றி கொண்டார் ஹாலேப்.

இரண்டாவது சுற்று சற்று நீண்டதாக இருந்தது. இதில் பொரபோவா ஹாலேப்புக்கு பெரும் சவால் கொடுத்தார். எனினும் 4 - 4 செற் கணக்கில் இந்த ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. போட்டியை ஹாலேப் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார். (ஐ)

## அவுஸ்திரேலிய ஓப்பன்: பார்வையாளர்களை அனுமதிக்க முடிவு!

மெல்பர்ன், பெப். 03

எதிர்வரும் பெப்ரவரி 8 ஆம் திகதி ஆரம்பமாகும் அவுஸ்திரேலிய ஓப்பன் போட்டிகளைப் பார்க்கத் தினமும் 25 ஆயிரம் முதல் 30 ஆயிரம் பேர் வரை ரசிகர்கள் அனுமதிக்கப்படுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடர் எதிர்வரும் 8ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதி வரை மெல்பர்னில் இடம்பெறவுள்ளது.

இந்தத் தொடரின் முதல் எட்டு நாட்களுக்கு அன்றாடம் 30 ஆயிரம் பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்கப்படும். காலிறுதி ஆரம்பமானதன் பின்னர் அந்த எண்ணிக்கை 25 ஆயிரமாக குறைக்கப்படும்.

போட்டியை பார்வையிட அனுமதிக்கப்படும் பார்வையாளர்கள் கடுமையான சுகாதார ஆலோசனைகளை பின்பற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

விக்ரோறியா மாநிலத்தின் விளையாட்டுத் துறை அமைச்சர் மார்ட்டின் பாக்குலா சனிக்கிழமையன்று இந்த செய்தியை உறுதிப்படுத்தினார்.

வழக்கமான பார்வையாளர்களின் எண்ணிக்கையில் இது 50 சதவீதமாகும். எனினும் இக் கூட்டம் அவுஸ்திரேலிய ஓப்பனில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## பாகிஸ்தானுக்கு ஐ.சி.சி. பாராட்டு இந்திய ரசிகர்கள் கடும் விமர்சனம்

டுபாய், பெப். 03

பாகிஸ்தானின், குவாடரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கிரிக்கெட் மைதானத்தை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) பாராட்டியுள்ளது.

ஏனைய அனைத்து கிரிக்கெட் மைதானங்களை விடவும் பலூசிஸ்தானில் உள்ள குவாடர் மைதானம் அழகாக உள்ளது என்று தெரிவித்துள்ள ஐ.சி.சி.,இதன் அழகை வேறு எந்த மைதானத்தினாலும் கொண்டுவர முடியாது என்று குறிப்பிட்டது.

ஐ.சி.சியின் இந்தப் பாராட்டை இந்திய ரசிகர்கள் ஏற்க மறுத்துள்ளனர். இது தொடர்பில் சமூக ஊடகங்களில் விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.

அத்துடன், தங்கள் நாட்டின் தர்மஷாலாவில் உள்ள இமாச்சல பிரதேச கிரிக்கெட் அசோசியேஷன் மைதானத்தை படங்களை வெளியிட்டு, “அந்த அழகினை விட, இது அழகாக இருக்கிறது என்று கருத்திட்டு வருகின்றனர். (ஐ)



## ஓவம் கழகத்தின் தொடர்: மருதம் வாரியர்ஸ் சம்பியன்

வவுனியா, பெப். 03

ஓவம் விளையாட்டுக் கழகம் நடத்திய மென்பந்து தொடரில் குறிஞ்சி கிங்ஸ் அணியை வென்று சம்பியனானது மருதம் வாரியர்ஸ் அணி.

வவுனியா - ஓமந்தை அரச உத்தியோகத்தர் குடியிருப்பில் ஓவம் விளையாட்டுக்கழகம் நிறுவப்பட்டது. இந்தக் கழகம் அயல் கிராமத்தவர்களுடன் இணைந்து மென்பந்து கிரிக்கெட் தொடர் ஒன்றை நடத்தியது.

மருதம் வாரியர்ஸ், முல்லை விங்ஸ், நெய்தல் புல்ஸ், குறிஞ்சி கிங்ஸ் என 4 அணிகள் பங்கேற்றன. லீக் போட்டியாக இடம்பெற்ற இந்தத் தொடரின் இறுதியாட்டத்துக்கு மருதம் வாரியர்ஸ், குறிஞ்சி கிங்ஸ் அணிகள் தெரிவாகின.



விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தின் முடிவில் மருதம் வாரியர்ஸ் சம்பியனானது. சிறந்த பந்துவீச்சாளராக மருதம வாரியர்ஸ் அணியின் ஆர்.சஜீபன், சிறந்த துடுப்பாட்டக்காரராக குறிஞ்சி கிங்ஸ் அணியின் கப்ரன் கு.நித்திலன், சிறந்த களத்தடுப்பாளராக முல்லை விங்ஸ் அணியின் பா.தமிழ்வாணன், சிறந்த, வளர்ந்துவரும் வீரராக நெய்தல் புல்ஸ் அணியின் எஸ்.உஜாந், தொடராட்ட நாயகனாக ஆர்.ஜெனோஜன் தெரிவாகினர்.

சம்பியன் வென்ற அணியின் அனைத்து வீரர்களுக் கும் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

பரிசளிப்பு நிகழ்வில், கழக ஒழுங்கமைப்பாளர்களான தமிழருவி த.சிவகுமாரன், மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபரும் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலை வருமான குணபாலன், கழகத்தலைவர் சு.வரதகுமார், அனுசரணையாளர்களில் ஒருவரான மன்னார் பிரதேச சபையின் உறுப்பினர் கே.ரொஜான், கழகத்தின் பொரு ளாளர் ம. லக்ஷ்மன்ராஜ்,கழகத்தின் செயலாளர் கு.நித்திலன் ஆகியோர் பங்கேற்றனர்.

## தென்னாபிரிக்கா - ஆஸி. டெஸ்ட் ஒத்திவைப்பு



சிட்னி, பெப். 03

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் தென்னாபிரிக்க பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய அணி ஒரே சமயத்தில் நியூஸிலாந் துக்கும் தென்னாபிரிக்காவுக்கும் சுற்றுப்பயணம் செல்ல விருந்தது. நியூஸிலாந்திலும், தென்னாபிரிக்காவிலும் விளையாடுவதாக இருந்ததது.

இதற்கான இரு அணிகளும் அண்மையில் அறிவிக்கப்பட்டன. இந்நிலையில் தென்னாபிரிக்க சுற்றுப் பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கிரிக்கெட் அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

தென்னாபிரிக்காவில் வேகமாகப் பரவி வரும் திரிபு அடைந்த கொரோனா வைரஸ் தொற்றால் வீரர்கள் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. இந்தத் தொடருக்காக தென்னாபிரிக்கா கூடுதல் செலவு செய்யவும் தயாராக உள்ளது. எனினும், எங்கள் வீரர்களின் பாதுகாப்பே எங்களுக்கு முக்கியம்.

கொரோனா பாதுகாப்பு வலயத்திற்குள் இருக்க சம்மதம் என்றபோதிலும் ஆபத்தான சூழலே நிலவு கிறது. இதனால், தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் தொடரை ஒத்திவைக்கிறோம். பின்னொருநாளில் இந்தத் தொடர் நடக்கும். இது குறித்த விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் - என்று கூறப்பட்டது.

# தனி இராச்சியம் அமைக்க முயற்சித்தால் உடன் கைது

## கிளிநொச்சி போராட்டக்காரர்களுக்கு பொலிஸ் பேச்சாளர் எச்சரிக்கை



கொழும்பு,பெப்.03

**அரசாங்கத்துக்கு எதிராகப் புரட்சி செய்து தனி இராச்சியம் அமைக்க முயற்சிப்பார்களாயின் அத்தகைய நபர்களை உடன் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டிய பொறுப்பு பொலிஸாருக்கு உள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.**

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்யக் கோரி கிளிநொச்சியில் நேற்று முன்தினம் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதுதொடர்பில் கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அஜித் ரோஹண மேலும் தெரிவித்தவை வருமாறு:

பொலிஸாரால் ஏற்கனவே கைது செய்யப்பட்டிருக்கும் தமது உறவினர்களை உடனடியாக விடுவிக்குமாறு கோரி கிளிநொச்சியில் ஏ- 9 வீதியில் நேற்று முன்தினம் சிலர் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களால் விடுதலை செய்யப்பட வேண்டும் எனக் கோருபவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீள உருவாக்க முயன்ற குற்றத்துக்காக பொலிஸ் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள்.

அத்துடன் கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து வெடிபொருட்கள் மற்றும் டெட்டனேட்டர் உள்ளிட்டவையும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அரசாங்கத்துக்கு எதிராகப் புரட்சி செய்வார்களாயின், தனி இராச்சியம் அமைக்க முயற்சிப்பார்களாயின் அத்தகைய நபர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டிய பொறுப்பு பொலிஸாருக்கு உள்ளது.

மேலும், காரணமின்றி அவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்ற கூற்று முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது- என்றார். (எ)

# சுதந்திர தினத்தை புறக்கணிக்கும் போராட்டத்துக்கு சுரேஷ் ஆதரவு



யாழ்ப்பாணம்,பெப்.03

இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் தொட்டு இன்றுவரை தமிழ்த் தேசிய இனத்தை இல்லாமல் செய்யும் நோக்கில் செயல்படுகின்ற போக்கைக் கண்டித்து இடம்பெறும் போராட்டத்தில் அணிதிரளுமாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப்பேச்சாளர் சுரேஷ் பிறேமச்சந்திரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்: அரசாங்கத்தின் எதேச்சாதிகார நடவடிக்கைகளுக்கு எதிராகவும் தமிழ் மக்கள் மீது திணிக்கப்படும் அடக்குமுறைகளுக்கு எதிராகவும் முஸ்லிம் மக்களின் மத நம்பிக்கைகளுக்கு எதிராக அவர்களது ஜனாஸாக்களை எரித்துவரும் அரசின் நடவடிக்கைகளைக் கண்டித்தும் மலையக உழைக்கும் வர்க்க தமிழ் மக்களுக்கு ஆயிரம் ரூபாய் அடிப்படைச் சம்பளம் வழங்கப்படும் எனக்கூறி இதுவரை அதனை நடைமுறைப்படுத்த பின்னிற்கும் அரசாங்கத்திடம் அதனை நடைமுறைப்படுத்தும்படி கோரியும் பொத்துவில் முதல் பொலிகண்டி வரை அரசிற்கு எதிராகச் செயல்படுத்தப்படும் போராட்டங்களில் முழு மக்களையும் கலந்துகொள்ளுமாறும் அதனூடாக எமது எதிர்ப்பை அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்துமாறும் அனைத்து தமிழ் முஸ்லிம் மக்களையும் ஜனநாயக முற்போக்கு சக்திகளையும் கோருகின்றோம் என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

# ஜனவரியில் 20 ஆயிரம் கொரோனா நோயாளிகள்

## சிறந்த அறிகுறியல்ல



கொழும்பு,பெப்.03

2021 ஆம் ஆண்டு 2020 ஐ விட மோசமானதாக அமையும் என்பதற்கான அறிகுறியாக ஜனவரி மாதத்தில் மாத்திரம் சுமார் 20 ஆயிரம் கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதேநிலைமை தொடருமாயின் 2021 ஆம் ஆண்டும் மோசமானதாகவே அமையும்.

எனினும் நாட்டில் தற்போது கொரோனா தடுப்பூசி வழங்கும் செயல்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தடுப்பூசியை ஏற்றிக்கொண்ட ஒருவருக்கு தொற்று ஏற்பட்டாலும் கூட அவரிடமிருந்து ஏனையோருக்கு வைரஸ் பரவுவதற்கான வாய்ப்புக்கள் மிகக்குறைவு என்பதோடு, மரணங்களின் எண்ணிக்கையும் பெருமளவில் குறைவடையும் வாய்ப்புள்ளது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித அலுத்கே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# 70 ஆயிரத்தை அண்மிக்கும் கொரோனா தொற்றாளர்கள்

கொழும்பு,பெப்.03

நாட்டில் நேற்றுக்காலை 9 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் மேலும் 826 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப் பட்டுள்ளது என தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து இலங்கையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 64 ஆயிரத்து 983ஆக உயர்வடைந்துள்ளது.

அவர்களில் 58ஆயிரத்து 75 பேர் தொற்றிலிருந்து மீண்டுள்ளனர். இந்நிலையில் தொற்றுக்குள்ளான ஆறாயிரத்து 585 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். அத்துடன் இலங்கையில் கொரோனா தொற்றால் இதுவரை 320 இற்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர். (எ)

# பிரசாந்தனுக்கு மறியல் நீடிப்பு

மட்டக்களப்பு,பெப்.03

இரட்டைப் படுகொலை வழக்கின் சாட்சியங்களை அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் பூபாலபிள்ளை பிரசாந்தனின் விளக்கமறியல் மேலும் 14 நாள்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

பிரசாந்தன் மீதான வழக்கு நேற்றுமுன்தினம் இணையவழியூடாக மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி. ரிஸ்வான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இச்சந்தர்ப்பத்திலேயே தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் பிரசாந்தனை மேலும் 14 நாள்களுக்குத் தடுப்புக் காவலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

ஆரையம்பதியில் 2008 ஆம் ஆண்டு இடம்பெற்ற இரட்டைப் படுகொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த பிரசாந்தன் ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் அந்த வழக்கின் சாட்சியங்களை அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைய மீண்டும் 2020 நவம்பர் 23 ஆம் திகதி கைது செய்யப்பட்டு தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (எ)

# இலங்கைக்கு அமெரிக்கா கடன்

கொழும்பு,பெப்.03

சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கும், பெண் தொழில் முனைவோருக்கும் உதவுவதற்காக இலங்கையின் சனச அபிவிருத்தி வங்கிக்கு 40 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியை அமெரிக்கா அங்கீகரித்துள்ளது.

அமெரிக்க அரசாங்கத்தின் அபிவிருத்தி வங்கியான அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் இந்த கடனுதவியானது இலங்கையில் தனியார்த்துறை முதலீடு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மியன்மாரின் நிலையை உன்னிப்பாக கண்காணித்து வருகின்றது இலங்கை

கொழும்பு,பெப்.03

இராணுவ சதித்திட்டத்தைத் தொடர்ந்து மியன்மாரின் நிலையை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாக வெளிவிவகார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதனிடையே யங்கூனில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகம் மியன்மாரில் உள்ள இலங்கையர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருப்பதாகவும் உதவி தேவைப்படும் எந்தவொரு இலங்கையருக்கும் உதவத் தயாராக இருப்பதாகவும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுவரை மியன்மாரில் வன்முறை அல்லது கலவர சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை என்றும் இலங்கைத் தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது.

மியன்மாரின் சக்திவாய்ந்த இராணுவம் நேற்று முன்தினம் சதித்திட்டம் மூலம் நாட்டின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றி அவசரகால நிலையை அறிவித்துள்ளது. ஆங் சான் சூகி உள்ளிட்ட அரசாங்கத் தலைவர்கள் தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். (எ)



### சிங்களத்தில் மட்டும் தேசியகீதம்

# தமிழர்களை இரண்டாந்தர பிரஜைகளாக்கும் திட்டமே!

### முன்னாள் எம்.பி. சரவணபவன்

யாழ்ப்பாணம், பெப். 03

"சுதந்திர தின நிகழ்வில் நாட்டின் தேசிய கீதம் சிங்கள மொழியில் மட்டுமே பாடப்படும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரட்ண கூறியிருக்கிறார். இதனை தமிழர்களை இரண்டாம் தரக் குடிமக்களாக மாற்றும் திட்டத்தின் ஒரு பகுதியாகவே நோக்கமுடியும். இது இனங்களிடையே ஒருபோதும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது."

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

இது தொடர்பில் அவர் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

"பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரட்ணவின் கருத்து மீண்டும் ஓர் இன ரீதியான சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இனங்களிடையே ஒற்றுமையையும், நல்லிணக்கத்தையும் வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக, இரு சமூகங்களைச் சேர்ந்த மக்களிடையே உள்ள இடைவெளியை மேலும் விரிசலடைய செய்து அரசியல் இலாபம் தேடுவதில் கோட்டாபய ராஜபக்ஷ நிர்வாகம் முனைப்புடன் செயல்படுகின்றது.

"தற்போதைய அரசின் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது, தமிழர்கள் தேசியகீதம் பாடக்கூடாது என்று அவர்கள் சட்டம் இயற்றினாலும் ஆச்சரியப்பட முடியாது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தனது பரிந்துரையில் சிங்கள மற்றும் தமிழ் மொழியில் தேசியகீதம் பாடப்படுவதை ஊக்குவித்தது.

தேசிய கீதம் இசைப்பது என்பது ஒரு நாட்டின் பிற தேசிய அடையாளங்களைப் போலவே, நாட்டிலும், அதன் சமூகத்திலும், அதன் மக்களிடமும் பொதிந்துள்ள பாரம்பரியம், வரலாறு மற்றும் அவை சார்ந்த நம்பிக்கைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு செயல்பாடே.

பெரும்பான்மை இனத்தவர், சிறுபான்மையினரின் உணர்வுகளை மதித்து அவர்கள் நாட்டின் மேல் கொண்டுள்ள பற்றை ஊக்குவிக்கவும், அதற்கு இடமளிக்கும் வகையிலும் நடந்துகொள்ள வேண்டும். அதனால் ஏற்படும் நன்மைகள் தொடர்பாக பெருமைப்படவும் வேண்டும். அனைவருக்கும் புரியும் வகையில் அவரவர் மொழியில் தேசிய கீதத்தை இசைப்பதே ஒற்றுமையின் வெற்றி என நான் கருதுகின்றேன்" - என்றுள்ளது.

# அறிவியல் ஆதாரங்களுடன் ஐ.நாவுக்கு பதிலளிப்போம்!

### அரசின் பேச்சாளர் கெஹலிய



**கொழும்பு, பெப். 03**

**'ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 46ஆவது கூட்டத் தொடரில், இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு அறிவியல் ஆதாரங்களுடன் விரிவாகப் பதிலளிக்கத் தயாராகவுள்ளோம்", என்று அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.**

நேற்று நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறுகையில்,

"இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவது தொடர்பான 30/1 தீர்மானம் குறித்த அரசின் நிலைப்பாட்டை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஏற்கனவே தெரிவித்துள்ளார்.

முந்தைய நிர்வாகம் இந்தத் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கிய நிலையில் தற்போது இலங்கை பல பிரச்னைகளை எதிர்கொண்டுள்ளது. இந்தத் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கப்பட்ட போதிலும், இந்த நிபந்தனைகளுக்கு இணங்க இலங்கையின் அரசமைப்பில் ஏற்பாடுகள் இல்லை.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 46 ஆவது கூட்டத் தொடர் பெப்ரவரி 22ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இதில் இலங்கை தூதுக்குழுவுக்கு வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தலைமை தாங்குவார்.

இந்த அமர்வு ஒரு மெய்நிகர் உச்சி மாநாடாக இருக்கக்கூடும். எனவே, சரியான நேரத்தில் போதுமான பிரதிநிதித்துவம் செய்யப்படும்" - என்றார். (ஐ)



## மின்சாரம் தாக்கி யானை பலி!

மட்டக்களப்பு -ஓட்டமாவடி - காவத்தமுனை பிரதேசத்தில் மின்சாரம் தாக்கிய நிலையில் யானை ஒன்று இறந்த சம்பவம், நேற்று அதிகாலை இடம்பெற்றதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இறால் வளப்பு பிரதேசத்தில் புகுந்த யானை, இறால் பண்ணைக்கு வழங்கப்பட்ட மின்சார வயரை இழுத்த நிலையில், வயர் அறுந்து மின்சாரம் தாக்கியதில் குறித்த யானை இறந்ததாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களமும் பொலிஸாரும் விசாரணைகளை நடத்துகின்றனர். (ஐ)

# மியன்மர்போல இலங்கையிலும் இராணுவ சதி அரங்கேறலாம்!

### பொ. ஐங்கரநேசன் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 03

"மியன்மரில் இடம்பெற்ற ஜனநாயகப் படுகொலையை இலங்கை மக்கள் தங்களுக்கான ஓர் எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ள வேண்டும். விழித்துக் கொள்ளாவிடில் மியன்மரைப் போன்று இலங்கையிலும் விரைவில் இராணுவ சதிப் புரட்சி அரங்கேறலாம்", என்று தமிழ்த் தேசியப் பசுமை இயகத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மியன்மரில் இராணுவ சதிப் புரட்சி அரங்கேறியமை தொடர்பாக அவர் விடுத்த ஊடக அறிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

மேலும், பௌத்தம் பெரும்பான்மையாக உள்ள மியன்மரில் இராணுவத்தால் சிறுபான்மையினரான ரோஹிங்கியா முஸ்லிம்கள் இனப்படுகொலைக்கு ஆளாக்கப்பட்டனர். இந்த இனவழிப்புத் தொடர்பான விசாரணைகளை அந்நாட்டு அரசாங்கத்துடன் இணைந்து முன்னெடுப்பதற்கு ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஏற்பாட்டில் மியன்மர் சுயாதீன புலனாய்வுப் பொறிமுறையொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

ஆங் சான் சூகி அம்மையாரின் வெற்றி இந்தப் புலனாய்வுப் பொறிமுறைக்கு இடங்கொடுக்கும் என்று அஞ்சியே பாராளுமன்றத் தேர்தலில் தனது ஆதரவுடன் போட்டியிட்ட கட்சி படுதோல்வியைச் சந்தித்த நிலையில், இராணுவம் சதிப்புரட்சியின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

முள்ளிவாய்க்காலில் தாங்கள் நிகழ்த்திய தமிழின அழிப்புக்கு எதிரான கத்தி தங்கள் தலைக்கு மேல் எந்நேரமும் தொங்கிக்கொண்டிருப்பதை ராஜபக்ஷ சகோதரர்கள் நன்கு அறிவார்கள். இதனாலேயே, மீளவும் ஆட்சி பீடம் ஏறியதும் முன்னைய அரசாங்கம் இணை அனுசரணை வழங்கிய ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகள் மேம்படுத்தல் தீர்மானத்தில் இருந்து விலகுவதாக அறிவித்தனர்.

இப்போது, மனித உரிமைகள் கவுன்ஸில் ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் கூடவிருக்கும் நிலையில் கவுன்ஸிலின் ஆணையாளர் இவ்விவகாரம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்படல் வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பதுடன் குற்றம் நிரூபிக்கப்படுமிடத்து அதற்கான தண்டனைகள் குறித்தும் பேசி வருகின்றார்.



பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி ஆனவுடன் சிவில் நிர்வாகத்தைப் படிப்படியாக இராணுவமயப்படுத்தி வருகின்றார். தனது முன்னாள் இராணுவ சகாக்களை சிவில் நிர்வாகத்தில் உயர் அதிகாரிகளாக நியமித்து வருகிறார். இனப்படுகொலை குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற கருத்து சர்வதேசரீதியாகப் பலம்பெற்று வரும் நிலையில், அதிலிருந்து தப்புவதற்காக, எதனையுமே இராணுவ ரீதியான மனோநிலையுடன் அணுகும் ஜனாதிபதி முற்றுமுழுதான இராணுவ ஆட்சிக்குள் பிரவேசிக்க மாட்டார் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. நடைபெற்றது தமிழினப் படுகொலையாயினும் அதன் பொருட்டு இலங்கையில் இராணுவம் மேலாதிக்கம் பெறுவது சிங்கள தேசத்துக்கும் உகந்தது இல்லை என்பதைச் சிங்கள மக்களும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

### மின்சாரம் தாக்கியதால்

# 40 அடி உயரத்தில் இருந்து தூக்கி வீசப்பட்ட இளைஞர்

### சாவகச்சேரியில் சம்பவம்

தென்மராட்சி, பெப். 03

கட்டட நிர்மாணப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இளைஞன் ஒருவர், மின்சாரம் தாக்கி காயமடைந்த நிலையில், சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மிருசுவில் - தவசிக்குளம் பகுதியைச் சேர்ந்த சிவலிங்கம் கலைச்செல்வன் (வயது 27) என்பவரே, இவ்வாறு காயமடைந்தவர் ஆவார்.

சாவகச்சேரி நகரப் பகுதியில், கடை தொகுதி கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. இங்கு பணியாற்றி வந்த அந்த இளைஞன் 4ஆம் மாடியில் கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சார தாக்குதலுக்கு இலக்கானார். அப்போது சுமார் 40 அடி உயரத்தில் இருந்து கீழே தூக்கி வீசப்பட்டார்.

இதில், தலையில் காயமடைந்த இளைஞன், அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு, சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (ஐ)

# கன்னியா வெந்நீருற்றுக்கு மக்கள் செல்லத் தடை!

திருகோணமலை, பெப். 03

கன்னியா வெந்நீருற்றுக்கு கொரோனா தொற்றாளர்கள் வந்து சென்றமையை அடுத்து அப்பகுதிக்கு மக்கள் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.



திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபைக்கு உட்பட்ட கன்னியா வெந்நீருற்றுக்கு நேற்று முன்தினம் கொரோனா சென்றதாக தகவல் பரவியது. இதையடுத்து அப்பகுதிக்கு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வெளி நபர்கள் உள்ளே செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாக பிரதான வாயில் கதவில் அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது. அத்துடன், வாயிலிலும் உள்ளேயும் உப்புவெளி பொலிஸார் கண்காணிப்புக்காக நிறுத்தப்பட்டுள்ளனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# பொத்துவில் - பொலிகண்டிவரை போராட்டத்துக்கு முஸ்லிம்கள் முழுஆதரவு வழங்க வேண்டும்!

## ரிஷாத் பதியுதீன் எம்.பி.

கொழும்பு, பெப் 03

**பொத்துவிலிலிருந்து பொலிகண்டி வரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, தமிழ் கட்சிகளின் நடைபவனி ஆர்ப்பாட்டத்துக்கு பூரண ஒத்து ழைப்பு வழங்குமாறு முஸ்லிம் மக்களிடம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

சிறுபான்மை சமூகங்களுக்கு எதிரான அடக்கு முறைகளை எதிர்த்தும், கண்டித்தும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த ஆர்ப்பாட்டம், இன்று தொடக்கம் ஆறாம் திகதி வரை நடக்கவுள்ளது.

நில ஆக்கிரமிப்பு, திட்டமிட்ட குடியேற்றம், தொல்பொருள் என்ற போர்வையில் தமிழ், முஸ்லிம் சமூகங்களின் பூர்வீக வாழிடங்களை ஏப்பமிடல், பேரினவாத அழுத்தங்களுக்கு அடிபணியும் அரசின் போக்குகள், ஜனாஸா எரிப்பு என்பவற்றைக் கண்டித்தே இந்த கண்டன நடைபவனி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

“சிறுபான்மையினர் என்ற வகையில், முஸ்லிம் சமூகமும் இந்த நெருக்கடிகளை எதிர்கொள்கின்றது. எனவே, எமது சகோதர சமூகம் ஏற்பாடு செய்துள்ள இந்த நடைபவனிக்கு, முஸ்லிம் சமூகமும் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வேண்டுகோள் விடுக்கிறது.” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (ஐ)



# கலையரசன் எம்.பி. - இராணுவம் நேற்று திருக்கோவிலில் முறுகல்!

திருக்கோவில், பெப். 03

மக்கள் சந்திப்புக்கு சென்ற த. கலையரசன் எம்.பியை இராணுவம் வழிமறித்து அவரின் வாகனத்தை சோதனையிட்டது. அத்துடன், அவரை திருக்கோவில் பிரதேசத்துக்கு செல்லவிடாமலும் தடுத்து நிறுத்த முயற்சித்தது. இதனால், இராணுவத்தினருக்கும் அவருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது:

நேற்று மதியம் கலையரசன் எம்.பி. திருக்கோவில் பிரதேசத்தில் மக்கள் சந்திப்புக்காகத் தனது வாகனத்தில் சென்று கொண்டிருந்தார். தம்பிலுவில் சோதனைச் சாவடியில் இராணுவத்தினர் அவரை வழிமறித்தனர். அவரை வாகனத்திலிருந்து கீழே இறங்குமாறு சத்தமிட்ட இராணுவத்தினர் அவரின் வாகனத்தை சல்லடை போட்டு தேடினர் என்று கூறப்படுகின்றது.

இதைத் தொடர்ந்து, அவர் திருக்கோவில் பிரதேசத்துக்கு செல்ல முடியாது என்று தடை விதித்தனர். இதற்கு கலையரசன் எம்.பி. மறுப்புத் தெரிவித்தமையால் முரண்பாடு ஏற்பட்டது.

இது தொடர்பில், கருத்து வெளியிட்ட கலையரசன் எம்.பி. இவ்வாறு, தனது வாகனத்தை சூழ நின்ற இராணுவத்தினர் தன்னிடம் அநாகரிகமான முறையில் நடந்து கொண்டனர். அத்துடன், பாராளுமன்ற உறுப்பினரான எனக்கே இத்தகைய நிலை என்றால், சாதாரண மக்கள் எவ்வாறான நெருக்கடியை எதிர்கொள்கிறார்கள் என்பதை சர்வதேசத்தினரும் புரிந்து கொள்ள வேண்டும் என்றார். (ஐ)

# இந்த ஆண்டு இறுதிக்குள் புதிய அரசமைப்பு வரும்!

## நீதி அமைச்சர் தெரிவிப்பு

இந்த ஆண்டின் இறுதிக்குள் புதிய அரசமைப்பு அறிமுகப்படுத்தப்படும் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். கண்டி மாவட்டத்தின் நீதிமன்றங்களை கண்காணிப்பதற்காக நேற்று சென்றிருந்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

புதிய அரசமைப்பு வரைவை தயாரிக்க ஜனாதிபதி சட்டத்தரணி டி சில்வா தலைமையிலான ஒரு நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்த குழு மார்ச் மாதத்தில் ஆரம்ப வரைவை சமர்ப்பிக்க உள்ளது.

இந்த ஆண்டு 100 காலாவதியான சட்டங்கள் திருத்தப்படும். சிவில் நடைமுறைக் கோவை மற்றும் குற்றவியல் நடைமுறைக் கோவை உள்ளிட்ட காலாவதியான சட்டங்களைத் திருத்துவதற்கு பல நிபுணர் குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் குறிப்பிட்டார்.

தேவையான சட்டங்களை அறிமுகப்படுத்த ஒரு முறையான திட்டமும் நடைபெற்று வருகிறது.

50-100 சட்டங்களை பல்வேறு துறைகள் மூலம் இந்த ஆண்டுக்குள் திருத்துவதற்கு அரசாங்கம் நம்புகிறது என்று அமைச்சர் கூறினார்.

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை விசாரிக்கும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு கையளித்த அறிக்கை தொடர்பாக ஊடகங்கள் கேள்வி எழுப்பியபோது, இது குறித்து ஆராய சிறப்பு அமைச்சர வைக் கூட்டம் நடைபெறும் என்று ஜனாதி பதி கோட்டபய ராஜபக்ஷ தெரிவித்தார் என்றும் கூறினார். இது தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நீதி அமைச்சர் சொன்னார்.

# அரசாங்கமும் எதிர்க்கட்சியும் நாட்டுக்காக இணைய வேண்டும்

## அஸ்கிரிய பீடாதிபதி கோரிக்கை



கொழும்பு, பெப். 03

நாட்டுக்காக அரசாங்கமும் எதிர்க்கட்சியும் கைகோக்க வேண்டும் என்று மகா சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டிற்காக அரசாங்கமும் எதிர்க்கட்சியும் கைகோத்துச் செயல்பட வேண்டிய ஒரு சந்தர்ப்பத்திற்கு நாடு வந்துவிட்டது என்று அஸ்கிரிய மஹா விகாரை பீடத்தின் அனுநாயக்கர் வண. உபாலி தேரர் வலியுறுத்தியுள்ளார்.

கட்சி அரசியல் கருத்துக்களுக்கு அடிபணியாமல் நாட்டின் நலனுக்காகத் தேசிய பிரச்னைகள் குறித்து சுயாதீனமாக ஆலோசனை வழங்குவது துறவிகளின் பொறுப்பு என்று நேற்று கண்டியில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார். (ஐ)

அருந்ததி
இணைய திருமண சேவை

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| 13424\| வே \|1985<br>தெல்லிப்பளை \| இந்து \| செவ் :02<br>Restaurant Manager \| Canada<br>புனர்பூசம்(மிதுனம்) \| 185செ.மீ | 13921\| ப \|1987<br>சாவகச்சேரி \| இந்து<br>N/A \| Sri lanka \| சு.செவ் :09<br>அஸ்வினி(மேடம்) \| 160செ.மீ |
| 13614 \| வி \|1985<br>நெல்லியடி \| இந்து \|<br>Cashier \| France \|<br>உத்தராடம்(தனுசு) \| 170செ.மீ | 13279 \| வே \|1987<br>அல்வாய் \| இந்து \| Sri Lanka \|<br>Assistant Director \| சு.செவ் :08<br>ஆய்யிலியம்(கடகம்) \| 165செ.மீ |
| 13563\| வே \|1985<br>வட்டுக்கோட்டை \| இந்து \|<br>Executive officer \| Sri Lanka \|<br>உத்தராடம்(மகரம்) \| 172செ.மீ | 13698\| வே \|1988<br>யாழ்நகரம் \| இந்து \| Sri Lanka<br>Development officer \|<br>அத்தம்(கன்னி) \| 157செ.மீ |
| 13560 \| வே \| 1985<br>பருத்தித்துறை \| இந்து \|<br>Business \| உத்திரட்டாதி(மீனம்)<br>UK \| 168செ.மீ | 13013\| வி \|1988<br>யாழ்நகரம் \| இந்து \| செவ் :08<br>Sri Lanka \| Clerk<br>அனுஷம்(விருச்சிகம்) \| 160செ.மீ |
| 13488\| வே \|1986<br>சாவகச்சேரி \| இந்து \| Sri Lanka<br>Bank Officer \| கார்த்திகை(ரிஷபம்<br>168செ.மீ | 13825\| ப \|1988<br>பொலிகண்டி \| இந்து \|<br>Auditor \| Sri lanka \|<br>பரணி(மேடம்) \| 160செ.மீ |

20, கே.கே.எஸ் வீதி கொக்குவில் யாழ்ப்பாணம்
0777 164 524 www.arunthathee.com

# இராணுவமே எங்களை சுட்டது!

## வவுனியாவில் படையினர் சூட்டதில் காயமடைந்தவர்கள் தெரிவிப்பு

வவுனியா, பெப். 03

இராணுவத்தை நாம் சுடவில்லை எம்மை நோக்கி இராணுவமே துப்பாக்கிச்சூட்டை நடத்தியது என்று அதில் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

வவுனியா செட்டிகுளம் பேராறு காட்டுப்பகுதியில் இராணுவத்தின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த இளைஞர் ஒருவர் வவுனியா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் சேர்க்கப்பட்டனர். இதில் இரண்டு இளைஞர்கள் தப்பிச்சென்றிருந்தனர்.

காயமடைந்த இளைஞர் உட்பட மூன்றுபேர் நேற்றுமுன்தினம், பேராறு காட்டுப்பகுதிக்கு சென்றுவிட்டு மாலை வேளை வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். அச்சமயம் மறைந்திருந்த இராணுவம் அவர்கள் மீது துப்பாக்கிச்சூட்டை நடத்தினர் என்று கூறப்படுகின்றது.

இதனிடையே, இராணுவத்தினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமையாலேயே இராணுவத்தினர் பதில் சூடு நடத்தினராம் என்று பொலிஸார் தெரிவித்தனர். ஆனால், தாங்கள் எந்தத் துப்பாக்கியையும் வைத்திருக்கவில்லை என்று பாதிக்கப்பட்ட இளைஞர்கள் தெரிவித்துள்ளனர்.





மரம் வெட்டுவதற்காகவே தாங்கள் காட்டுப் பகுதிக்கு சென்றனர் என்றும், வீடுதிரும்பிக் கொண்டிருந்தபோதே இராணுவம் தம் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியது என்றும் அவர்கள் கூறினர்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்தவர் செட்டிக்குளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, வவுனியா மருத்துவமனைக்கு மறாற்ப்பட்டார். மற்றொருவர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் செட்டிக்குளம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன்
சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதை வழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ் அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : பாரதீ
பெண்கள் மருத்துவம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - நேரலை



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்

**இரவு**
7.00 மணி : கொஃபி வித் பிரமுகர்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்



10.00 மணி : யாவரும் கேளீர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
சந்தானம் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம்
(கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம்
(வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம்,
விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்

**பகல்**
1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதசரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம்
கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம்
தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண தரம் வரலாறு
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி
வினாத்தாள் கணிதம்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ்ப்பாணம் கைதடி கயிற்றசிட்டி
கந்தசாமி தேவஸ்தானம் ஹோமப் பெருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் காரைநகர் வேல்
முருகமூர்த்தி கோவில் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
08.00 மணி : யாழ்ப்பாணம் கைதடி கயிற்றசிட்டி
கந்தசாமி தேவஸ்தானம் ஹோமப் பெருவிழா

**காலை**
7.00 மணி - ஆலயப் பாடலகள்
8.00 மணி - ஜெபமாலை
9.00 மணி - மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி - திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி - குழந்தை யேசு மன்றாட்டு
11.30 மணி - ஜெபமாலை

**பகல்**
12.00 மணி - திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி - மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி - நற்சிந்தனை
3.00 மணி - பாடல்
4.30 மணி - திருகோணமலை திருப்பலி

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்

**பகல்**
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
7.00 மணி : பிறை பிரசங்கம்

**இரவு**
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.02.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.